ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபியாத்துடைய நிகரற்ற தியாகங்கள் பக்கம் 3

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் (ரலி) ஆகியோரின் தூய வாழ்க்கை பக்கம் 9

பழக்க அடிமைத்தனங்களுக்கு (Addictions) இஸ்லாம் கூறும் தீர்வுகள் பக்கம் 18

ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும் பக்கம் 22



மாத இதழ்

# நுபுவ்வத் வழி

www.ahmadiyyamuslimjamaat.in/home/books/tamil

Nubuwwat Vazhi | July 2024 | Vol. 3 - Issue No. 8



Ahmadiyya Muslim Jama'at, Ashura East Street, Melapalayam, Tirunelveli - 627 005
Email: subeditor.nubuwwatvazhi@gmail.com | Mobile: +91 94868 58311






# திருக்குர்ஆன்

إِنَّمَا يُرِيدُ ٱلشَّيْطَٰنُ أَن يُوقِعَ بَيْنَكُمُ
ٱلْعَدَٰوَةَ وَٱلْبَغْضَآءَ فِى ٱلْخَمْرِ وَٱلْمَيْسِرِ
وَيَصُدَّكُمْ عَن ذِكْرِ ٱللَّهِ وَعَنِ ٱلصَّلَوٰةِ ۖ
فَهَلْ أَنتُم مُّنتَهُونَ

மது, சூதாட்டம் ஆகியவற்றால் உங்களுக்கிடையே பகையையும், வெறுப்பையும் உருவாக்கி அல்லாஹ்வை நினைவு கூர்வதில் இருந்தும் தொழுகையிலிருந்தும் உங்களைத் தடுத்து விடவே ஷய்த்தான் விரும்புகின்றான். எனவே நீங்கள் (இவற்றிலிருந்து) தவிர்ந்து கொள்ள மாட்டீர்களா? (5:92)



# ஹதீஸ்

ابْنَ عُمَرَ، يَقُولُ قَالَ رَسُولُ اللَّهِ ـ صلى الله
عليه وسلم ـ " لُعِنَتِ الْخَمْرُ عَلَى عَشَرَةِ أَوْجُهٍ
بِعَيْنِهَا وَعَاصِرِهَا وَمُعْتَصِرِهَا وَبَائِعِهَا وَمُبْتَاعِهَا
وَحَامِلِهَا وَالْمَحْمُولَةِ إِلَيْهِ وَآكِلِ ثَمَنِهَا
وَشَارِبِهَا وَسَاقِيهَا " .

ஹஸ்ரத் இப்னு உமர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ‘‘மது 10 அம்சங்களில் சபிக்கப்பட்டுள்ளது. மது, அதை தயாரிப்பவர், எவருக்காக தயாரிக்கப்படுகிறதோ அவர், அதனை விற்பவர், வாங்குபவர், அதனை எடுத்துச் செல்வபர், எவருக்காக எடுத்துச் செல்லப்படுகிறதோ அவர், அது விற்ற பணத்தை உண்பவர், அதனை அருந்துபவர், அதனை ஊற்றிக் கொடுப்பவர் அனைவருமே சபிக்கப்பட்டவர்களே!’’ (சுனன் இப்னுமாஜா ஹதீஸ் எண். 3380)

# ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபியாத்துடைய நிகரற்ற தியாகங்கள்

மதிப்பிற்குரிய அமத்துல் வஸீஃ ஷுமாயிலா சாஹிபா
(நாயிப் சத்ர் அவ்வல், லஜ்னா இமாயில்லாஹ் பாரத்)

தமிழாக்கம்:
A.P.A. தாரிக் அஹ்மது

அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்:

مَنْ عَمِلَ صَالِحًا مِّنْ ذَكَرٍ اَوْ اُنْثٰى وَهُوَ مُؤْمِنٌ فَلَنُحْيِيَنَّهٗ حَيٰوةً طَيِّبَةً ۚ
وَلَنَجْزِيَنَّهُمْ اَجْرَهُمْ بِاَحْسَنِ مَا كَانُوْا يَعْمَلُوْنَ

"ஆணாயினும், பெண்ணாயினும் எவர் நற்செயல் செய்தாலும், அவர் நம்பிக்கை கொண்டவராக இருப்பின் அவருக்கு நிச்சயமாக நாம் தூய்மையான ஒரு வாழ்வினை வழங்குவோம். மேலும் நாம் அவர்களுக்கு அவர்கள் செய்ததை விட அழகான நற்பலனை வழங்குவோம்." (சூரா அந்நஹ்ல் வசனம் 98)

இதே போன்று ஹதீஸில் இவ்வாறு வருகிறது. ஹஸ்ரத் உமர் பின் கத்தாப் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூற நான் கேட்டுள்ளேன். பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என்னுடைய தோழர்களுடைய கருத்து வேறுபாடு குறித்து நான் அல்லாஹ்விடம் கேட்டபோது அல்லாஹ் எனக்கு இவ்வாறு வஹீ இறக்கினான். 'முஹம்மதே! உம்முடைய தோழர்களுடைய அந்தஸ்து என்னைப் பொறுத்தவரையில் விண்ணின் நட்சத்திரங்களைப் போன்றது ஆகும். அவற்றுள் சிலவற்றை விட சில பிரகாசமானவையாக உள்ளன. ஆனால் அனைத்திலும் ஒளி உள்ளது. ஆகவே எவர் உமது யாரேனும் தோழரைப் பின்பற்றுவாரோ அவர் என்னைப் பொருத்தவரை நேர்வழி பெற்றவராவார்.'

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் இவ்விஷயத்தையும் கூறினார்கள்: 'என்னுடைய தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள் ஆவார்கள். அவர்களுள் எவரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழி பெற்று விடுவீர்கள்' என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள். (மிஷ்காத், கிதாபுல் மனாகிப்)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

மார்க்க வரலாற்றில் பெண்களுக்கு மிகப்பெரும் அந்தஸ்து இருந்ததாக திருக்குர்ஆனிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது. பெண்களின் புகழத்தக்க பணிகளைக் குறித்து அல்லாஹ் சாட்சி கூறியுள்ளான். எந்தப் பணிகளின் காரணமாக ஆண்கள் நற்கூலிக்கு உரிமை உள்ளவர்களாக ஆக்கப்பட்டார்களோ அல்லது ஆண்களுக்கு அதற்கான நற்கூலி வழங்கப்பட்டதோ அதே புகழத்தக்க பணிகளின் காரணமாக பெண்கள் அந்த வெகுமதிகளிலிருந்து பங்கு பெறக்கூடியவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்று அல்லாஹ் கூறுகின்றான். (2018 ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் பெண்களுக்கு ஆற்றிய சொற்பொழிவு)

இந்த கட்டளைகளைப் பேணி நடப்பதற்கு பெண்களாகிய நமக்கு அவசியமான விஷயம் என்ன -வென்றால், சஹாபியாத்துடைய வாழ்க்கை வரலாற்றையும், அவர்களின் தூய வாழ்வின் மாபெரும் தியாகங்களுடைய சம்பவங்களையும் நினைவூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். அதன் மூலமாக நம் முன் எல்லா நேரமும் அந்தப் பிரகாசமான முன்மாதிரிகளின் நினைவுகள் புதுப்பிக்கப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். மேலும் நம்முடைய ஈமானுக்கு ஒளி கிடைத்துக் கொண்டே இருக்க வேண்டும். இஸ்லாத்திற்காக நமது உயிர், செல்வம், நேரம் மற்றும் சந்ததிகளைத் தியாகம் செய்வதற்கு எந்நேரமும் நாம் ஆயத்தமாக இருக்கிறோம் என்ற உத்வேகமும், ஆர்வமும் நமக்குள்ளும் நமது சந்ததிகளுக்குள்ளும் பிறக்க வேண்டும். மார்க்கத்தின் மீது நமக்கு நேசம் உருவாக வேண்டும்.



ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியாத்துடைய வாழ்க்கையைப் படித்துப் பார்க்கும்போது இஸ்லாமிய மார்க்கத்திற்காக அவர்கள் செய்துள்ள தியாகங்களின் எவ்வாறான உதாரணங்கள் காணக் கிடைக்கின்றனவென்றால், அவற்றிற்கு இணையான உதாரணங்கள் எந்த ஒரு மார்க்கத்திலும் காணக் கிடைப்பதில்லை. சில இடங்களில் பொருள் தியாகங்களின் பிரகாசமான உதாரணங்கள் காணக்கிடைக்கின்றனவென்றால், சில இடங்களில் உணர்வுகளைத் தியாகம் செய்யக்கூடிய காட்சிகள் காணக் கிடைக்கின்றன. சில இடங்களில் உயிர்களைத் தியாகம் செய்யக்கூடிய காட்சிகள் காணக் கிடைக்கின்றனவென்றால் சில இடங்களில் தம்முடைய சந்ததிகளுக்கு அறிவுரை செய்யும்போது, 'போர்க்களத்தில் புறமுதுகு காட்டினால் கியாமத் நாளன்று நான் உனது முகத்தைக் கூட பார்க்க மாட்டேன்' என்று கூறும் காட்சிகள் காணக் கிடைக்கின்றன.

ஈமானுக்கு ஒளியூட்டுகின்ற இவ்வாறான எண்ணற்ற காட்சிகள் காணக் கிடைக்கின்றன. இஸ்லாத்தின் வானத்தில் இந்த சஹாபியாத் ஒளிரும் நட்சத்திரங்களைப் போன்று மின்னுவதைக் காண முடிகின்றது. பெருமானார் (ஸல்) அவர்களின் சஹாபியாத்துடைய நிகரற்ற தியாகங்களின் முன்மாதிரிகள் ஒரு நீண்ட தொடராக உள்ளது. அந்த அனைத்தையும் எடுத்துரைப்பது மிகவும் கஷ்டமான விஷயமாகும். (ஆகவே) இன்று சில சஹாபியாத்துடைய தியாகங்களைப் பற்றி நான் எடுத்துக் கூறுவேன். அந்த சஹாபியாத், அல்லாஹ் மற்றும் அவனுடைய தூதர் (ஸல்) அவர்களுடன் நன்றி உணர்வு, கொள்கைப் பிடிப்பு, நேசம் ஆகியவற்றின் வியத்தகு முன் உதாரணங்களை நிலைநாட்டி இருக்கிறார்கள். அவர்கள் மார்க்கத்திற்காக தியாகங்களை செய்துள்ளார்கள். துன்பங்களை பொறுத்துக் கொண்டுள் -ளார்கள் போர்க்களத்தில் பல்வேறு விதமான தொண்டுகளை செய்துள்ளார்கள்.

❖ முதலில் நான், உம்முல் மு.்.மினீன் ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். இவர்களுக்கு எல்லா விதமான தியாகங்களிலும் முதன்மையான அந்தஸ்து கிடைத்துள்ளது.

40 வயதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் திருமணம் நிகழ்ந்தது. தம்முடைய மூதாதையர் -களிடமிருந்து கிடைத்த சொத்துக்களை தம்முடைய உழைப்பால் பெருகச் செய்திருந்தார்கள். அவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய காலடியில் வைத்து விட்டார்கள். ஏனென்றால், தம்முடைய வாழ்க்கைத் துணை(யாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்) நம்பிக்கைக்குரியவர் என்றும், கலப்பற்றவர் என்றும் அவர்களின் உள்ளம் உண்மையான நம்பிக்கையுடன் அவர்களுக்கு சாட்சி கூறியது. இது மிகப்பெரும் தியாகமாக இருந்தது. இந்த (பொருளாதார) முதலீடு இஸ்லாத்தின் உறுதிப்பாட்டிற்கு முக்கியமான பங்களிப்பைக் கொடுத்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்கு செல்வத்தின் மீது எந்த ஆசையும் இருக்கவில்லை என்பதையும், ஏழைகளுக்கும் வறியவர்களுக்கும் அனுதாபியாக அன்னார் இருந்தார்கள் என்பதையும் பெருமானார் (ஸல்) அவர்களின் அழகிய நடைமுறையின் இந்தத் தோற்றத்தையும் உலகம் கண்டு கொண்டது. அதேபோல், அடிமைகளை விடுதலை செய்வதின் மூலமாக மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காக அன்னார் எந்த அளவு ஆர்வம் கொண்டிருந்தார்கள் என்பது தெரிய வந்தது. ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் செய்த தியாகம் மிகப்பெரும் விளைவை ஏற்படுத்தியது. பெருமானார் (ஸல்) அவர்களே இதை உண்மைப்படுத்திய -வாறு இவ்வாறு கூறியுள்ளார்கள்: 'கதீஜா எவ்வாறான நேரத்தில் தமது செல்வத்தைக் கொண்டு எனக்கு உதவி செய்தார் என்றால் மற்றவர்களுக்கு அப்போது அந்த நல்வாய்ப்பு கிடைக்கவில்லை.' (முஸ்னத் அஹ்மத், தொகுதி 6 பக்கம் 118)




தம்முடைய கணவர் இறை வணக்கத்தில் அதிக ஈடுபாட்டுடன் இருப்பதை கண்டபோது அதை தடுக்கவில்லை. மாறாக, ஒத்தாசை செய்பவராக மாறி, உள்ளத்தாலும் உயிராலும் தொண்டு செய்வதில் ஈடுபட்டு விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிரா குகையில் தனிமையில் இறைவணக்கத்தில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய வயது ஏறக்குறைய 55 ஆக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களுக்காக தாமே உணவு சமைத்து கொடுப்பார்கள். (ஹிரா குகைக்குச் சென்று) அதிக நாட்கள் ஆகியிருந்தால் தாமே உணவை எடுத்துக் கொண்டு ஹிரா குகைக்குச் செல்வார்கள். ஹிரா குகைக்குச் செல்லும் கற்கள் நிறைந்த பாதையையும், அதன் உயரத்தையும் நினைவில் வைத்துக் கொண்டு இந்த மாபெரும் பெண்மணியுடைய தியாகத்தை கணக்கீடு செய்து பார்க்க வேண்டும்! இது எந்த அளவு மிகப்பெரும் பணியாக இருந்தது என்றால், கண்ணியத்திற் -குரிய மேலான இறைவன் புறமிருந்தும் இதைப் பாராட்டியவாறு செய்தி வந்தது. ஹஸ்ரத் ஜிப்ராயீல் (அலை) அவர்கள் வருகை தந்து கூறினார்கள்:

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் ஒரு பாத்திரத்தைக் கொண்டு வருகிறார்கள். அதில் குழம்பு, உணவு போன்ற ஏதோ உள்ளது. அவர்கள் தங்களிடம் வருகை தரும் போது, அல்லாஹ்வின் சார்பாகவும் என் சார்பாகவும் அவர்களுக்கு சலாம் கூறுங்கள் சொர்க்கத்தில் முத்துக்களால் ஆன மாளிகையைப் பற்றி நற்செய்தியும் கூறுங்கள். அதில் எவ்வித கூச்சலும் இருக்காது. எவ்வித களைப்பும் இருக்காது. (ஸஹீஹ் முஸ்லிம், கிதாப் .்.பஸாயிலுஸ் ஸஹாபா பாபு .்.பஸாயிலி கதீஜா ரலி...,)

பெருமானார் (ஸல்) அவர்களுக்கு நபித்துவம் வழங்கப்பட்டபோது இருவரும் திருமண பந்தத்தில் இணைந்து 15 வருடம் ஆகியிருந்தது. இருவருடைய இணக்கத்தின் நிலை எவ்வாறானதாக இருந்தது என்றால், அந்த தீர்க்கமான பெண்மணி பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆதரவளிக்கும் பொருட்டு எவ்வாறான சொற்றொடரைக் கூறினார்கள் என்றால், அது ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் அழகிய முன்மாதிரியைப் பிரதிபலிக்கக்கூடியதாக இருந்தது. ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் உங்களை ஒருபோதும் இழிவடையச் செய்ய மாட்டான்! ஏனென்றால், தாங்கள் உறவினர்களுடன் அழகிய முறையில் நடந்து கொள்கின்றீர்கள். உண்மையைப் பேசுகின்றீர்கள். மக்களுடைய சுமைகளை சுமக்கின்றீர்கள். விருந்தோம்பல் செய்கின்றீர்கள். துன்பத்தில் உள்ள மக்களுக்கு உதவி செய்கின்றீர்கள். இவ்வாறான அழகிய நற்பண்புகளைக் கொண்ட மனிதருக்கு என்ன ஆபத்து நிகழும்! (புகாரி, கிதாபு பத்யில் வஹ்யி)

இஸ்லாத்திற்கும், இஸ்லாத்தினுடைய தோற்றுனருக் -கும் ஏற்பட்ட எதிர்ப்பின் உச்சத்தையும் அன்னார் கண்டார்கள். நபித்துவத்தின் 7-ஆம் ஆண்டில் இஸ்லாத்தை அழிப்பதற்காக குறைஷியர்கள் முஹம்மது (ஸல்) அவர்களையும், அன்னாருடைய குடும்பத்தினரையும் ஷிஅபா அபீதாலிப் எனும் பள்ளத்தாக்கில் சிறை பிடிக்க வேண்டும்

என்று திட்டம் தீட்டிய போது, சிறை பிடிக்கப்பட்டவர்களுள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களுடன் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும் இருந்தார்கள். மூன்று வருடத்தைக் கொண்ட இந்த காலகட்டம், தொடர் தியாகங்களில் கழிந்தது. திறந்த வெளியில் பசியுடனும், தாகத்துடனும், பருவ நிலை மாற்றத்தின் கஷ்ட நஷ்டத்துடனும் கழிந்தது. அன்பர்களை விட்டு பிரிந்து இருக்க வேண்டியதிருந்தது. எவ்வளவோ பொறுத்துக் கொள்ள வேண்டியது இருந்தது. ஆனால், ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களோ இறைத் தூதரை ஒருபோதும் விட்டுவிடவில்லை. பசியோடு காலம் கழித்தது தன் பாதிப்பை வெளிப்படுத்தியது. அந்நாட்களுடைய துன்பத்தை பொறுத்துக் கொள்ள இயலாமல் பெருமானார் (ஸல்) அவர்களின் நன்றியுணர்வுள்ள இந்த மனைவி வ.ஃபாத் ஆகிவிட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய பிரிவின் துயரத்தை பெருமானார் (ஸல்) அவர்களால் வாழ்நாள் முழுவதும் மறக்க இயலவில்லை. ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் எந்த அளவு நற்பேறு பெற்ற பெண்மணியாக இருந்தார்கள் என்றால் அவர்களைக் குறித்து பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

"…..கதீஜா (ரலி) அவர்களை விட வேறு எவரும் சிறந்தவராக இருக்க முடியாது! முழு உலகமும் என்னை மறுத்துக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் என் மீது நம்பிக்கை கொண்டார்கள். முழு உலகமும் என்னை பொய்ப்படுத்திக் கொண்டிருந்த நேரத்தில் அவர்கள் என்னை உண்மைப்படுத்தினார்கள். எல்லா மக்களும் என்னை விட்டு விட்ட நேரத்தில் அவர்கள் தம் செல்வத்தைக் கொண்டு என் மீது அனுதாபம் காட்டினார்கள். என் நலன் நாடினார்கள். ஆயிஷாவே! நான் என்ன செய்வேன்? கதீஜாவின் நேசம் எனக்கு ஊட்டப்பட்டுள்ளது. என் உள்ளத்தில் அவர்களது நேசம் அமர வைக்கப்பட்டுள்ளது." (முஸ்லிம், கிதாபுல் ஃபஸாயில் பாபு ஃபஸ்லி கதீஜா ரலி…,)

மதிப்பிற்குரிய தோஸ்த் முஹம்மத் சாஹிப் ஷாஹிது அவர்களின் சொற்களில் ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுக்கு பாராட்டு மடல் வாசிக்கிறேன். அவர்கள் கூறுகிறார்கள்: உம்முல் மு.ஃமினீன் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்கள் இன்று இவ்வுலகில் இல்லை. அன்னாருடைய கபரின் தடயங்களும் அழிந்து போய் விட்டன. ஆனால் அன்னாருடைய பணியும், பெயரும் என்றென்றும் உயிருடன் உள்ளன. அதே போன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய நாவிலிருந்து வெளிப்பட்ட புகழ் சொற்களும் காற்றில் இருந்து அழியாது. நிச்சயமாக அவை பெருமானார் (ஸல்) அவர்களை நேசிக்கக் கூடிய ஒவ்வொரு அன்பருடைய உள்ளத்திலும், சிந்தையிலும் பாதுகாப்பாக உள்ளன. கியாமத் நாள் வரையிலும் அவை எதிரொலித்துக் கொண்டே இருக்கும். கம்பீரமிக்க, தூய்மையான, நிலையான அரியணையில் அமரக்கூடிய உயிருள்ள தூதரான, நபிமார்களின் பேரரசராகிய முஹம்மது முஸ்த.ஃபா (ஸல்) அவர்களின் முதலாவது வாழ்க்கை துணை என்ற அடிப்படையில் ஹஸ்ரத் கதீஜா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் நிச்சயமாக ஈருலக ராணியாக திகழ்கிறார்கள்.

முஹம்மது (ஸல்) அவர்களின் இறைவன் மீது ஆணையாக! உலகின் பெரும் பெரும் வல்லரசாலும் கூட ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களுடைய இந்த ஆன்மிக கிரீடத்தைப் பிடுங்க முடியாது! அவர்களுடைய விண்ணுலக ஆட்சி ஒருபோதும் வீழ்ச்சியடையவும் செய்யாது!

❖ இரண்டாவது நற்குறிப்பு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மிகவும் நேசத்திற்குரிய மனைவியாகிய ஹஸ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களுடைய -தாகும். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் புகைப்படம் பட்டு கைக்குட்டையில் சுற்றப்பட்டிருக்கும் நிலையில் அல்லாஹ் காட்டிக் கொடுத்தான். ஹஸ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் தம் வாழ்வின் ஏறக்குறைய 9 வருடங்களை மட்டுமே பெருமானார் (ஸல்) அவர்களுடன் வாழக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள். அந்த சில வருடங்களின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பெருமானார் (ஸல்) அவர்களிடமிருந்து மார்க் -கத்தைக் கற்றுக் கொள்வதிலும், அன்னாருடைய செயல்களையும் நடவடிக்கைகளையும் ஆழ்ந்து கவனித்து பார்ப்பதிலும் கழித்தார்கள். எந்த அளவு மார்க்கத்தைக் கற்றுக் கொண்டார்கள் என்றால், மார்க்க சட்டங்களை அறிந்த பெரும் சஹாபிகளில் ஒருவராக அவர்கள் கணக்கிடப்படுகிறார்கள்.




ஜாமி.ஃ திர்மிதியில் ஹஸ்ரத் அபூ மூசா அஷ்அரி (ரலி) அவர்களின் ஓர் அறிவிப்பு உள்ளது. அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் ஒரு விஷயம் தொடர்பாக கேட்கப்பட்டு அவர்களிடத்தில் அது குறித்து ஏதேனும் தகவல் கிடைக்காத அளவுக்கு எந்தவொரு கஷ்டமான விஷயத்தையும் நாங்கள் எதிர்கொள்ளவில்லை. ஹஸ்ரத் ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் குறைவான வயதிலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் துணைவியாக ஆனார்கள். ஆயினும் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் தூய வாழ்க்கை வாழ்ந்து வந்தார்கள். பல நாட்களாக வீட்டில் அடுப்பு எரியாது. மண்ணால் கட்டப்பட்ட வீடாக இருந்தது. ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் வீட்டின் எல்லா வேலைகளையும் செய்வார்கள். மாவு அரைப்பார்கள் மாவு குழைப்பார்கள் உணவு சமைப்பார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் படுக்கையை எப்பொழுதும் தமது கைகளால் தாமே விரிப்பார்கள் தலைமாட்டருகில் தண்ணீரையும், மிஸ்வாக்கையும் வைப்பார்கள். 'மனைவிமார்களாகிய எங்கள் ஒவ்வொருவரிடத்திலும் ஒரு ஜோடி ஆடையைத் தவிர வேறு எதுவும் இருக்கவில்லை' என்று ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுடன் போர்களிலும் அவர்கள் கலந்து கொண்டு காயமுற்றவர் -களுக்கு தண்ணீர் புகட்டக்கூடிய பணியை செய்து வந்தார்கள்.

வெற்றியின் காலகட்டம் துவங்கியபோது போர்ச் செல்வங்கள் போதுமான அளவுக்கு வர ஆரம்பித்தபோது பெருமானார் (ஸல்) அவர்களின் மனைவிமார்களும் வாழ்வாதாரத்திற்குத் தேவையான செலவுகளை அதிகரித்து

தருமாறு கோரிக்கை வைத்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்கு இது விரும்பத்தகாத விஷயமாக இருந்தது. பெருமானார் (ஸல்) அவர்கள் ஒரு மாதம் வரை அனைத்து மனைவிகளையும் விட்டு பிரிந்து விட்டார்கள். சத்தியம் செய்து பிரிந்த காலகட்டம் முடிந்த போது பெருமானார் (ஸல்) அவர்கள் எல்லோரையும் விட முதலில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் வந்தார்கள். அல்லாஹ்வின் கட்டளையான சூரா அல்அஹ்ஸாபுடைய 29, 30 ஆகிய வசனங்களை ஓதிக் காட்டினார்கள். அதன் பொருள் என்னவென்றால்,

'நபியே! நீர் உமது மனைவியரிடம் கூறுவீராக: நீங்கள் உலகையும், அதன் அலங்காரத்தையும் விரும்பினால், வாருங்கள், நான் உங்களுக்கு உலகப் பொருட்களுள் சிலவற்றை வழங்கி, அழகான முறையில் உங்களை விடுவித்து விடுகின்றேன். நீங்கள் அல்லாஹ்வையும், அவனது தூதரையும், மறுமை வீட்டையும் விரும்பினால், நிச்சயமாக அல்லாஹ் முழுமையாக இஸ்லாத்தில் நிலைத்திருப்பவர் -களுக்கு மாபெரும் கூலியினை ஆயத்தப்படுத்தி வைத்துள்ளான்' என்று கூறி இதற்கான பதிலை நான் வேண்டுகிறேன் என்றார்கள்.

போர்ச்செல்வம் போதுமான அளவுக்கு வருவதை கண்டு தாக்கத்திற்குள்ளாகி (பெருமானார் (ஸல்) அவர்களின்) மனைவிமார்கள் வீட்டுச் செலவுகளை அதிகரித்து கொடுக்குமாறு தற்காலிகமாக கோரிக்கை வைத்தார்கள்! ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களின் கோபத்தை யாரால் பொறுத்துக் கொள்ள இயலும்! ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் உடனடியாக பதிலளித்தவாறு, எனது எஜமானரே! நான் இறைவனையும், அவனுடைய தூதரையும், மறுமை நாளையும் விரும்புகிறேன் என்று கூறி விட்டார்கள். மற்ற மனைவிமார்களும் இதே பதிலைத்தான் கூறினார்கள். மேலும், உலகில் உள்ள அனைத்து முஸ்லிம் பெண்களுக்கும் ஒரு முன்னுதாரணத்தை நிலைநாட்டி விட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மரணம் நிகழ்ந்த போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் வயது 20 ஆக மட்டுமே இருந்தது. அவர்கள் மிகவும் பொறுமை, உறுதிப்பாடு ஆகியவற்றின் முன்னுதாரணத்தை நிலைநாட்டினார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் அறை (Room) பெருமானார் (ஸல்) அவர்கள் இறுதியாக ஓய்வெடுத்த இடமாக ஆகியிருந்தது. பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களும் அந்த அறையில்தான் அடக்கம் செய்யப்பட்டார்கள். ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுடன் உணர்வுகளின் ஒரு மிகப்பெரும் தியாகமும் இணைந்துள்ளது. அவர்கள் தமது அறையில் மீதம் இருந்த இடத்தை தமக்காக வைத்திருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் தமது மகனை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடத்தில் அனுப்பி அந்த அறையில் அடக்கம் செய்யப்படுவதற்கு அனுமதி கேட்ட போது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள், 'இந்த இடத்தை நான் எனக்காக வைத்திருந்தேன். ஆனால் நான் இன்று என்னை விட உமர் அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்றேன் என்று கூறிவிட்டார்கள். அன்பிற்குரிய கணவர் மற்றும் மகத்துவமிக்க தந்தை ஆகியோருடன் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்ற தமது விருப்பத்தை, கலீ∴பாவின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக தியாகம் செய்தார்கள். இது ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களின் மாபெரும் தியாகமாக இருக்கிறது.


❖ இப்போது ஹஸ்ரத் உம்மு சல்மா ரலியல்லாஹு அன்ஹா அவர்களின் வாழ்வைப் பார்க்கலாம். இவர்கள் மிகவும் செல்வச் செழிப்போடு வளர்ந்தார்கள். முஸ்லிமான பிறகு தமது கணவருடன் அபிசீனியாவுக்கு ஹிஜ்ரத் செய்தார்கள். இவர்களுடைய கணவர் அபூ சல்மா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பால்குடி சகோதரர் ஆவார். ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அவர்கள் ஹிஜ்ரத் செய்த முதல் பெண்மணியாக திகழ்கிறார்கள். அபிசீனியாவிலிருந்து திரும்பி வந்த பிறகு மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். ஏனென் -றால் மக்கத்து பூமி முன்பை விட அதிக ரத்த வெறி கொண்ட பூமியாக ஆகியிருந்தது. ஹிஜ்ரத்தின் போது இவர்களுடைய கோத்தி -ரத்தைச் சார்ந்தவர்கள் இவர்களைத் தடுத்தார்கள். இவர்களைப் போக விடவில்லை. இறுதியில் அபூ சல்மா (ரலி) அவர்கள் தனியாகவே மதீனாவுக்குச் சென்று விட்டார்கள். அவர்கள் சென்றுவிட்ட பிறகு கணவருடைய வீட்டார்கள் வந்து அவர்களுடைய அப்பாவி குழந்தையான சல்மாவை, இவள் எங்களுடையவள் என்று கூறி பிடுங்கிச் சென்று விட்டார்கள். ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அவர்களுக்கு மிகுந்த வேதனை ஏற்பட்டது. தினந்தோறும் பரிதவித்தவாறு வெளியே புறப்பட்டுச் செல்வார்கள். முழு பகலும் அழுது கொண்டே இருப்பார்கள். ஒரு வருடம் வரை இந்நிலை நீடித்தது. இறுதியில் அவர்களுடைய உறவினர்களுக்கு கருணை பிறந்தது. 'நீங்கள் இந்த இயலாத ஏழைப் பெண்மணியை ஏன் விடுதலை செய்வதில்லை?' என்று கேட்டார்கள். அப்பொழுது அவர்களுக்கு கொஞ்சம் கருணை தோன்றியது. ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அவர்கள் தம் கணவரிடம் செல்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. ஆகவே கணவருடைய வீட்டார்களுக்கும் கொஞ்சம் சிந்தனை தோன்றி அவர்கள் அந்த குழந்தையையும் கொடுத்து விட்டார்கள். அப்போதுதான் அவர்களால் மதீனா சென்றடைய முடிந்தது. அவர்களுடைய கணவர் ஹஸ்ரத் அபூ சல்மா (ரலி) அவர்கள் மிகப்பெரும் குதிரை வீரராக இருந்தார்கள். உஹது போரில் எந்த அளவு காயமுற்று போனார்கள் என்றால் அவர்களால் உயிர் பிழைக்க முடியவில்லை. (போர் நடந்து) கொஞ்சம் காலத்திற்குப் பிறகு அவர்களுடைய காயம் இன்னும் பெரிதாகி அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். மரணச் செய்தியை கேட்டுவிட்டு பெருமானார் (ஸல்) அவர்கள், அவர்களுடைய வீட்டுக்குச் சென்றார்கள். கூக்குரலிட்டு அழும் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. 'அந்தோ பரிதாபம்! இது எவ்வாறான (அகால) மரணம்' என்று ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) கூறிக் கொண்டிருந்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் பொறுமையைக் கடைபிடிக்குமாறு வலியுறுத்திக் கூறியவாறு (ஹஸ்ரத் அபூ சல்மா ரலியல்லாஹு அன்ஹா) அவர்களை விட சிறந்த பிரதிநிதியை அல்லாஹ் வழங்குவதற்காக துஆ செய்யுங்கள் என்று கூறினார்கள்.



பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபூ சல்மா (ரலி) அவர்களின் ஜனாஸா தொழுகையில் 9 தக்பீர்களைக்

கூறினார்கள். இதைப் பற்றி மக்கள் கேட்டபோது, இவர்கள் ஆயிரம் தக்பீர்களுக்கு தகுதி உடையவர்களாக இருந்தார்கள் என்றார்கள். அப்போது ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அவர்கள் கர்ப்பிணியாக இருந்தார்கள். குழந்தை பெற்ற பிறகு இத்தாவுடைய காலகட்டம் கடந்த பிறகு திருமணத்திற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் தூதுச் செய்தி அனுப்பினார்கள். தாம் பிள்ளைகளை உடையவள் வயதும் அதிகம் என்று உம்மு சல்மா அவர்கள் காரணங்களைக் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் அந்த அனைத்து காரணங்களைக் குறித்தும் அவர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தி கொடுத்தார்கள். ஆகவே பெருமானார் (ஸல்) அவர்களுடன், அவர்களின் திருமணம் நடந்தது.

❖ முதல் முஸ்லிம் ஷஹீத் பெண்மணி ஹஸ்ரத் சுமையா (ரலி) ஆவார்கள். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதில் ஏழாவது நபராக இருக்கிறார்கள். அவர்களை ஷிர்க் செய்யுமாறு கட்டாயப்படுத்துவதற்காக முஷ்ரிக் (இணைவைப்பாளர்)கள் எல்லாவித முயற்சிகளையும் செய்தார்கள். மக்காவின் கொதிக்கும் மணலில் இரும்புக் கவசத்தை அணிவித்து வெயிலில் பசியோடும் தாகத்தோடும் முழு பகலும் நிற்க வைப்பார்கள். ஆனால் உறுதியின் தோற்றமாக திகழ்ந்த அவர்களுக்கு முன் எல்லாவித முயற்சிகளும் பயனற்றுப் போயின. ஓர் இரவில் அபூஜஹ்லில் அவர்களை ஏசிப் பேச ஆரம்பித்தான். அவனுடைய கோபம் எந்த அளவு அதிகரித்தது என்றால் ஹஸ்ரத் சுமையா (ரலி) அவர்கள் மீது ஈட்டியெறிந்து அவர்களைக் கொன்று விட்டான். ஹஸ்ரத் சுமையா (ரலி) அவர்கள் ஷஹீதாகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்.



❖ ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் பனூ நஜ்ஜாரைச் சேர்ந்தவர்களாக இருந்தார்கள். மதீனாவில் பிறந்திருந்தார்கள். ஹிஜ்ரத்தின் மூன்றாவது ஆண்டில் கா∴பிர்கள் படையெடுத்து வருவதைப் பற்றிய தகவல் வந்ததுமே போருக்கான ஆயத்தங்கள் ஆரம்பித்து விட்டன. போரில் காயமடைந்தவர்களுக்கு மருந்திடவும், தண்ணீர் புகற்றிடவும் செல்ல விரும்புவதாக ஹஸ்ரத் உம்மு அம்மாரா (ரலி) அவர்கள் விண்ணப்பம் செய்தார்கள். அது ஒப்புக் கொள்ளப்பட்டது. அவர்கள் தம் கணவர் மற்றும் இரு மகன்களுடன் போரில் கலந்து கொண்டார்கள். காயமடைந்தவர்களுக்குத் தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கும்போது பெருமானார் (ஸல்) அவர்கள் ஆபத்தில் இருப்பதைக் கண்டார்கள். உடனே, தண்ணீர் பையை எறிந்து விட்டு கையில் வாளேந்தியவாறு பெருமானார் (ஸல்) அவர்களைக் காப்பாற்றுவதற்காக அன்னாருக்கு அருகில் சென்று போரிட ஆரம்பித்தார்கள். பெருமானார் (ஸல்) அவர்களுக்குக் காயத்தை ஏற்படுத்துவதற்காக கா∴பிர்கள் மிகவும் இரக்கமற்ற முறையில் தொடர்ச்சியாக அன்னார் மீது தாக்குதல் நடத்திக் கொண்டே இருந்தார்கள். அப்போது அன்னாரைக் காப்பாற்றுவதற்காக தம் உயிரைப் பணயம் வைத்து சண்டையிட்டுக் கொண்டிருந்த மிகச் சிலரே அன்னாரைச் சுற்றி எஞ்சியிருந்தனர். இவ்வாறான இக்கட்டான, அபாயமான சந்தர்ப்பத்தில் துணிவுள்ள இந்த பெண்மணி பெருமானார் (ஸல்) அவர்களுக்காக தம் உயிரைக் கொடுப்பதற்கு ஆயத்தமாகி விட்டார்கள். பெருமானார் (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் தொடுக்கப்படும்போதெல்லாம் இவர்கள் அம்புகளைக் கொண்டும் வாளைக் கொண்டும் அவற்றைத் தடுப்பார்கள். பெருமானார் (ஸல்) அவர்களே இதைப் பற்றி இவ்வாறு கூறுகிறார்கள்: 'உஹது போரில் எனது வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் உம்மே அம்மாரா அவர்கள் தொடர்ச்சியாக சண்டையிடுவதை நான் கண்டேன்.' இப்னு கமிய்யா என்பவன் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மிக அருகில் சென்று விட்டபோது இந்த வீரப் பெண்மணிதான் அவனைத் தடுத்தார்கள். துர்பாக்கியசாலியான அவன் வாளைக் கொண்டு எவ்வாறு தாக்கினான் என்றால் உயிரை அர்ப்பணிக்க ஆயத்தமாக இருந்த அப்பெண்மணியின் தோளில் மிக ஆழமான காயம் ஏற்பட்டு விட்டது. அவ்வாறிருந்தும் அவர்கள் பின்வாங்கவில்லை. மாறாக முன்னேறிச் சென்று வாளைக் கொண்டு அவன் மீது தாக்குதல் தொடுத்தார்கள். எந்த அளவு உத்வேகத்துடன் அவன் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்றால் அவன் இரட்டைக் கவசம் அணிந்திருக்கவில்லை என்றால் கொல்லப்பட்டிருப்பான்.

❖ இப்போது அஸ்மா பின்த் அபீ பக்ர் (ரலி) அவர்களின் நிலை பற்றி கேளுங்கள்! ஈமான் கொண்டவர்களுள் இவர்கள் 18-வது நபராக திகழ்கிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை வரலாறு என்னவென்றால், அவர்களின் மகன் அப்துல்லாஹ் பின் ஸுபைர் (ரலி) அவர்கள் ஷஹீதானபோது ஹஜ்ஜாஜ் என்பவன் அவர்களின் உடலை சிலுவையில் தொங்க விட்டான். மூன்று நாட்கள் கடந்த பிறகு ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் பணிப் பெண்ணுடன் தம் மகனுடைய உடலைக் காண வந்தார்கள். அந்த உடல் தலைகீழாக தொங்கவிடப்பட்டிருந்தது. உள்ளத்தைத் தாங்கிப் பிடித்தவாறு அந்தக் காட்சியை அவர்கள் பார்த்தார்கள். 'இந்தப் பயணி குதிரையை விட்டு இறங்கக்கூடிய நேரம் இன்னும் வரவில்லையா?' என்று மிகவும் பொறுமையுடன் கேட்டார்கள். சில நாட்களுக்குப் பிறகு அப்துல் மலிக் உடைய கட்டளை வந்தடைந்தபோது ஹஜ்ஜாஜ் அந்த உடலை கீழே இறக்கச் செய்து யூதர்களுடைய கபருஸ்தானில் எறிந்து விட்டான். ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் அந்த உடலை வீட்டுக்கு எடுத்து வர செய்தார்கள். உடலைக் குளிப்பாட்டினார்கள். ஜனாஸா தொழ வைத்தார்கள். ஹஸ்ரத் இப்னு ஸுபைர் (ரலி) அவர்களின் உடல் பாகங்கள் ஒவ்வொன்றும் தனித்தனியாக ஆகியிருந்தன. குளிப்பாட்டுவதற்காக ஏதேனும் ஒரு அங்கத்தைத் தொடும்போது அது கையோடு வந்தது. ஆயினும் ஹஸ்ரத் அஸ்மா அவர்கள் இக்காட்சியைக் கண்டு பொறுமை காத்தார்கள். இந்த தனித்தனியான உடல் பாகங்களின் மீதுதான் இறை அருள் இறங்கியுள்ளது என்பதைப் போன்று அவர்கள் பொறுமையைக் கடைபிடித்தார்கள். அப்துல்லாஹ் உடைய உடலைக் காணாத வரையில் தமக்கு மரணம் வர வேண்டாம் என்று ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் துஆ செய்து

கொண்டிருந்தார்கள். ஆகவே (உடலைக் கண்ட) பிறகு ஒரு வாரம் கூட கழிந்திருக்கவில்லை. ஹஸ்ரத் அஸ்மா (ரலி) அவர்கள் வ∴பாத் ஆகி விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன். அப்போது அவர்களின் வயது 100 ஆக இருந்தது.

❖ ஹஸ்ரத் உம்மு அபான் ரலியல்லாஹு அன்ஹா தம் கணவருடைய ஆயுதங்களை அணிந்து கொண்டு போர்க் களத்தைச் சென்றடைந்தார்கள். முஸ்லிம்களுடன் இணைந்து கொண்டு ரோமானியர்களுக்கு எதிராக அம்பு மழையைப் பொழிந்தார்கள். டமாஸ்கஸின் தளபதியோ எவ்வகையிலும் பின்வாங்குவதற்கு ஆயத்தமாக இல்லை. ஆனால், இவர்கள் மிகச்சிறந்த வில் எய்துபவராக இருந்தார்கள். அவர்கள் தக்க நேரம் பார்த்து அவனுடைய கண்ணில் அம்பெய்தினார்கள். அதனால் அவன் கூக்குரலிட்டு பின்வாங்கி ஓட ஆரம்பித்தான். ஆகவே ரோமானியர்களும் ஓடி விட்டார்கள்.

❖ ஹஸ்ரத் கன்ஸா ரலியல்லாஹு அன்ஹா அவர்கள் தம் வயோதிகக் காலத்தில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் கவிதையில் நிகரற்றவர்களாகத் திகழ்ந்தார்கள். காதிஸியா போரில் அவர்கள் தம்முடைய நான்கு மகன்களையும் அழைத்துக் கொண்டு போர்க்களத்துக்கு வந்தார்கள். அவர்களைப் பார்த்து அறிவுரை கூறும் விதமாக, அன்பிற்குரிய மகன்களே! நீங்கள் இஸ்லாத்தை உங்களது விருப்பத்தின் பேரில் ஏற்றுக் கொண்டீர்கள். உங்களது விருப்பத்தின் பேரிலேயே ஹிஜ்ரத் செய்தீர்கள். ஏனென்றால், உங்களது ஊருக்கு நீங்கள் பாரமாக இருக்கவில்லை. உங்களது பகுதியில் பஞ்சமும் ஏற்படவில்லை. அவ்வாறிருந்தும் கூட நீங்கள் உங்களது வயோதிகத் தாயாரை இங்கு கொண்டு வந்துள்ளீர்கள். பாரசீகர்களுக்கு முன்னால் கொண்டு வந்துள்ளீர்கள். இறைவன் மீது ஆணையாக! நீங்கள் ஒரே தாய் தந்தையின் பிள்ளைகள் ஆவீர்கள். நான் உங்கள் தந்தைக்கு நம்பிக்கை துரோகமும் செய்யவில்லை. உங்களது தாய் வழி மாமன்களை இழிவு படுத்தவும் இல்லை. உலகம் அழியக்கூடியது என்பதையும், கா∴பிர்களுடன் ஜிஹாது செய்வது பெரும் நற்கூலி என்பதையும் நீங்கள் அறிவீர்கள். இறைவன் இவ்வாறு கூறுகிறான்: يَاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا اصْبِرُوْا وَصَابِرُوْا وَرَابِطُوْا (நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமையுடன் செயல்படுங்கள். (எதிரிகளை விட அதிகமாக) பொறுமையைக் கையாளுங்கள். எல்லைகளைக் கண்காணித்துக் கொள்ளுங்கள்.)

இதற்கேற்ப, காலையில் எழுந்து போருக்குச் செல்ல ஆயத்தமாகுங்கள். இறுதி நேரம் வரை போரிடுங்கள் என்றார்கள். ஆகவே நான்கு மகன்களும் ஒரே போன்று கடிவாளத்தை எடுத்துக் கொண்டு புறப்பட்டார்கள். மிகவும் உத்வேகத்துடனும், போர்க்கள கவிதைகளைப் பாடியவாறும் கா∴பிர்கள் மீது பாய்ந்தார்கள். ஹஸ்ரத் கன்ஸா (ரலி) அவர்கள் தம் மகன்களை அனுப்பி வைத்த பிறகு காட்டுக்குள் சென்று துஆக்களைச் செய்ய ஆரம்பித்து விட்டார்கள். இறைவன் அருள் செய்தான். முஸ்லிம்கள் வெற்றி பெற்றனர். அந்த சஹாபியாவுடைய நான்கு மகன்களும் உயிருடன் திரும்பி வந்தனர்.

(தொடரும்...)

## கருத்து சுதந்திரம்

**ஏதேனும் செய்தியை உலகில் பரப்புவதற்காக - மனிதனுடைய மதிப்பையும் நிலைபெறச் செய்வதற்காக, எண்ணத்தை வெளிப்படுத்துவது மற்றும் அதை எட்ட வைப்பதற்கான சுதந்திரம் மிகவும் அவசியமாகும். எப்போது வரை ஒரு மார்க்கம் மனித கண்ணியத்தை நிலைபெறச் செய்யவில்லையோ, அதனைப் பாதுகாக்கவில்லையோ அப்போது வரை அது மார்க்கம் என்று பெயரிடப்படுவதற்குத் தகுதியற்றதாகும். இஸ்லாம் போன்ற மார்க்கம், கருத்து சுதந்திரம் மற்றும் பேச்சு சுதந்திரத்திற்கு எதிராக இருப்பது சாத்தியமற்றதாகும். இஸ்லாம் கருத்து சுதந்திரத்திற்கான போதனையை எந்தளவு துணிவாகவும், தைரியமாகவும் ஆதரிக்கிறதென்றால் அதற்கான உதாரணம் எந்த தத்துவவாத அமைப்புகளிலோ அல்லது மதங்களிலோ கண்ணுக்கெட்டும் தூரம் வரை தென்படுவதில்லை.**

**இஸ்லாம் சமச்சீரான சுதந்திரத்தை ஊக்குவிக்கிறது. இஸ்லாத்தின் பார்வையில் சுதந்திரத்தின் கட்டடம் 'கொஞ்சம் எடு கொஞ்சம் கொடு' என்ற அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். அதாவது தனிநபர் சமுதாயத்திற்காக சில பொறுப்புகளைச் சுமக்க வேண்டும்; சமுதாயம் தனி நபருக்காக சில உரிமைகளைக் கொடுக்க வேண்டும். சமூகத்தில் கட்டுப்பாடற்ற சுதந்திர முழக்கமிடுவது - முற்றிலும் வெவ்வேறான, பொருளற்ற, இயல்பில் இல்லாத, உண்மையற்ற முழக்கமாகும். சில சமயங்களில் சுதந்திரம் என்பதற்கு எந்தளவு தவறாக பொருள் கொள்ளப்படுகின்றதென்றால் பேச்சு சுதந்திரத்திற்கான அழகிய போதனை மிகவும் கோரமான, அசிங்கமான தோற்றம் கொண்டதாக ஆகி விடுகிறது. ஏச்சுப் பேச்சு, மற்றவர்களின் மதிப்பு மரியாதையின் மீது தாக்குதல் தொடுத்தல், தூய பரிசுத்தமானவர்களை ஏளனப்படுத்துவது போன்றவை எவ்வாறான சுதந்திரம்? (இஸ்லாம் அவ்ர் அஸ்ரே ஹாஸிர் கே மஸாயில் கா ஹல் பக்கம் 41,42, 44)**

**(ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்)**

# ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் (ரலி) ஆகியோரின் தூய வாழ்க்கை

ஜனாப் ஸைனுத்தீன் ஹாமித் சாஹிப் (நாஸிம் தாருல் கஸா, காதியான்)

தமிழாக்கம்: முஅல்லிம் M. ஷாஜஹான்

مُحَمَّدٌ رَّسُوْلُ اللّٰهِ ؕ وَالَّذِيْنَ مَعَهٗۤ اَشِدَّآءُ عَلَى الْكُفَّارِ رُحَمَآءُ
بَيْنَهُمْ تَرٰىهُمْ رُكَّعًا سُجَّدًا يَّبْتَغُوْنَ فَضْلًا مِّنَ اللّٰهِ وَرِضْوَانًا ؗ

இந்தத் திருக்குர்ஆன் வசனத்தின் மொழியாக்கம் இவ்வாறு ஆகும்:

முஹம்மது ரஸூலுல்லாஹ் (ஸல்) மற்றும் அவருடன் இருக்கும் அந்த மக்களும் நிராகரிப்பாளர்களுக்கு மிகவும் கடுமையானவர்களாகவும் தங்களுக்கிடையில் அதிக இரக்கம் உள்ளவர்களாகவும் உள்ளனர். நீர் அவர்களைக் குனிந்தவர்-களாகவும் சிரம் பணிந்தவர்களாகவும் காண்பீர். அவர்கள் அல்லாஹ்விடமிருந்தே அருளை மற்றும் திருப்தியை விரும்புகின்றனர். (48:30)



இந்த அருளுக்குரிய சந்தர்ப்பத்தில் எளியவன் ரஸூல் (ஸல்) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் உஸ்மான் கனீ (ரலி) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பை எடுத்துக் கூறுவேன். இன்ஷா அல்லாஹ்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பரிசுத்த ஆற்றல் மற்றும் அழகிய தர்பிய்யத்தின் விளைவால் கண்ணியத்திற்-குரிய நபித் தோழர்களிடம் எத்தகைய அசாதாரணமான ஆன்மிக நல்லொழுக்க, சமூக மற்றும் பண்பாட்டுப் புரட்சி ஏற்பட்டது என்றால் அதன் தன்மையை எடுத்துக் கூறும் போது ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) கூறுகிறார்கள்:

اَحْيَيْتَ اَمْوَاتَ الْقُرُوْنِ بِجَلْوَةٍ     مَاذَا يُمَاثِلُكَ بِهٰذَا الشَّانِ

அதாவது நீர் நூற்றாண்டுகளாக மரணித்திருந்த-வர்களை ஒரே பிரதிபலிப்பில் உயிர் கொடுத்து விட்டீர். இந்த மகத்துவத்தில் உமக்கு இணையானவர் எவர் உள்ளார்.

ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்கள் தம் சஹாபிகளுக்கு எவ்வடிவில் தர்பிய்யத் வழங்கினார்கள் எனில் அவர்களைப் பற்றி ஹுஸூர் (ஸல்) அவர்கள் கூறும் போது ஆன்மிக வானத்தின் ஒளி வீசும் நட்சத்திரங்களோடு ஒப்புமை கொடுத்து இவ்வாறு கூறியுள்ளார்கள்:

اَصْحَابِىْ كَالنُّجُوْمِ بِاَيِّهِمْ اِقْتَدَيْتُمْ اِهْتَدَيْتُمْ

அதாவது என் தோழர்கள் நட்சத்திரங்களைப் போன்றவர்கள். அவர்களில் எவரை நீங்கள் பின்பற்றினாலும் நேர்வழியைப் பெறுவீர்கள். சஹாபாவின் மகத்துவம் பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

اِنَّ الصَّحَابَةَ كُلُّهُمْ كَذُكَاءِ     قَدْ نَوَّرُوْا وَجْهَ الْوَرٰى بِضِيَاءِ

அதாவது சஹாபா அனைவரும் சூரியனைப் போன்றவர்கள். அவர்கள் தம் ஒளியால் படைப்பினங்களின் முகங்களை ஒளியூட்டி உள்ளார்கள்.

இந்த ஒளிமயமான நட்சத்திரங்களில் மகத்துவமான ஒரு நட்சத்திரம் சய்யிதுனா உஸ்மான் (ரலி) அவர்கள் ஆவார்கள். அன்னார் கிலா∴பத்தே ராஷிதாவின் மூன்றாவது தோற்றமாக இஸ்லாத்தின் உயர்வுக்காக அசாதாரணமான பணிகளைச் சிறப்பாக நிறைவேற்றியவர்களாக இஸ்லாம் மற்றும் முஸ்லிம்களுக்காக ஷஹாதத் பானத்தை அருந்தினார்கள். அவர்கள் மீது அல்லாஹ் திருப்தி கொண்டான். அவர்களும் அவன் மீது திருப்தி கொண்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) குரைஷின் பனு உமையா கோத்திரத்தில் யானைப் படை சம்பவத்தின் ஐந்து ஆண்டுக்குப் பிறகு கிபி 575-ல் மக்காவில் பிறந்தார்கள். அன்னாரின் தந்தை துணி வியாபாரி ஆக இருந்தார்கள். மிகவும் செல்வந்தராக இருந்தார்கள். சிறு வயதிலிருந்தே நன்மையின் பக்கம் ஈர்க்கப்பட்டவர்களாக அன்னாரின் இயல்பு இருந்தது. அன்னாரின் வயது 34, 35 ஆக இருக்கும் போது, ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் இறைவனின் கட்டளைக்கிணங்க நபித்துவ வாதம் செய்தார்கள்.

அன்னார் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் அவர்களின் மேலான நல்லொழுக்கம் காரணமாக மிக நல்ல மனிதராகக் கருதினார்கள். மேலும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு நட்பின் தொடர்பு இருந்தது. ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி), ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது ஈமான் கொள்வதில் அனைவரையும் முந்திக் கொண்டார்கள். அந்நாட்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) வியாபாரம் தொடர்பாக சிரியா (ஷாம்) சென்றிருந்-தார்கள். திரும்பி வந்தபோது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் தம் பிற நண்பர்களுடன் ஹஸ்ரத் உஸ்மான் பின் அ∴பான் (ரலி) அவர்களுக்கும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ள அழைப்பு விடுத்தார்கள். எனவே ஒருவர் பின் ஒருவராக அனைவரும் பைஅத் செய்தனர். அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அனைவரையும் விட முதலில் பைஅத்

செய்தவராக இருந்தார்கள். நுபுவ்வத்தின் நான்காம் ஆண்டு தொடக்கத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹ் வெளிப்படையாக தப்லீக் செய்வதற்குக் கட்டளையிட்டான். மேலும் மக்காவின் ஒவ்வொரு தெருவிலும் விரைவாக இஸ்லாம் பற்றிய சர்ச்சை எழுந்தது. அதன் விளைவாக மக்காவின் குரைஷிகள் எதிர்ப்பைத் தொடங்கினர். மேலும் எவர்கள் முஸ்லிம்களாகி விட்டனரோ அவர்களைத் தனிமைப்படுத்தி அநீதி இழைக்கத் தொடங்கினர். அன்னாரின் சிறிய தந்தை ஹகம் பின் அபி ஆஸ் அன்னாரைக் கடுமையாக அடித்தார். மேலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் செல்ல விடாமல் தடுப்பதற்காக அன்னாரின் கால்களில் சங்கிலியால் கட்டிப் போட்டார். அன்னார் பொறுமை மற்றும் சகிப்புத்தன்மையுடன் செயல்பட்டார்கள். மேலும் இந்த துன்பங்களைப் பொருட்படுத்தவில்லை. சில நாட்களுக்குப் பிறகு அன்னாரின் சிறிய தந்தை கோபத்தில் அன்னாரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மிகவும் நல்லவராகவும் கண்ணியமானவராகவும் அழகான நல்ல ஒழுக்கமான இளைஞராக இருந்தார்கள். மேலும் தன் குடும்பத்திலிருந்து விலக்கப்பட்டவராக இருந்தார்கள். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் புதல்வி ருகய்யாவின் நிகாஹ்வை உஸ்மான் (ரலி) அவர்களுடன் செய்து வைத்தார்கள்.

மக்காவில் குரைஷி தலைவர்களின் திட்டங்களினால் முஸ்லிம்களுக்கு துன்பங்களின் தொடர் நாளுக்கு நாள் அதிகரித்தது. மேலும் ஹஸ்ரத் உஸ்மான் அவர்களுக்கும் கடுமையான ஆபத்து இருந்தது. இந்நிலையில் சில முஸ்லிம் ஆண்கள் பெண்களுக்கு அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்ய அனுமதி கிடைத்தது. அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் மற்றும் அவர்களின் மனைவி ருகய்யாவும் இருந்தனர். அன்னார் அபிசீனியாவிற்கு ஹிஜ்ரத் செய்து செல்லும்போது அவர்களே அக்குழுவின் அமீராக இருந்தார்கள். அபிசீனியாவில் சிறிது காலம் தங்கிய போது அன்னாருக்கு தப்லீக் செய்வதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இவ்வகையில் வெளிநாடுகளில் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்தில் தப்லீக் செய்வதற்கு நல் வாய்ப்பைப் பெற்ற சில பாக்கியமானவர்களில் அவர்களும் ஒருவராவார்கள்.



ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒருவர் ஒருவராக, இருவர் இருவராக மக்காவின் முஸ்லிம்களை யஸ்ரப் (மதீனா) ஹிஜ்ரத் செய்வதற்கு அனுமதி கொடுத்த போது, ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் தம் மனைவி ஹஸ்ரத் ருகய்யா (ரலி) அவர்களை உடன் அழைத்துக் கொண்டு மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்து சென்று விட்டார்கள். மக்காவில் இருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத்துக்குப் பின் உஸ்மான் (ரலி) அவர்களின் மனைவி ருகய்யா மரணம் அடைந்தார்கள். மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் மற்றொரு மகளான ஹஸ்ரத் உம்மு குல்ஸூம் (ரலி) அவர்களின் நிக்காஹ்வை அன்னாருடன் செய்து வைத்தார்கள். இவ்வாறாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இரு புதல்விகள் உடனான நிக்காஹ்வின் காரணமாக அன்னார் துன்னூரைன் (அதாவது இரு ஒளிகளையுடையவர் என்ற புனைப் பெயரால் பிரபல்யமானார்கள்.

அரேபியாவில் அடிமை பேதம் தொன்று தொட்டு இருந்து வந்தது. இஸ்லாம் அதற்கு தடை விதித்தது. அடிமையை விடுதலை செய்வதைப் பெரும் நன்மையாக ஆக்கியது. அறிவிப்புகளில் வருகிறது: "ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஆயிரக்கணக்கான அடிமைகளை விடுவித்தார்கள். அன்னார் விலை கொடுத்து வாங்கி விடுதலை செய்யப்பட்ட அடிமை தென்படாத மதீனாவின் வீதிகள் ஏதுமில்லை." பிறகு இந்த நன்மையின் செயலைத் தொடர வேண்டும் என்பதற்காக எல்லா ஜுமுஆ நாளிலும் ஓர் அடிமையை விடுதலை செய்து வருவதை அன்னார் வழக்கமாக்கிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு சில அசாதாரணமான பொருள் தியாகம் செய்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. மதீனா ஹிஜ்ரத்திற்கு பிறகு முஸ்லிம்களுக்கு மிகவும் இக்கட்டான காலமாக இருந்தது. எனவே அடிப்படை தேவைகளில் அவசியமான ஒன்று குடிநீர் ஆக இருந்தது. ஒரு நாள் முஸ்லிம்களிடம் நபி (ஸல்) அவர்கள் ஒரு யூதனுக்கு சொந்தமான நல்ல தண்ணீர் கிணற்றை வாங்கி முஸ்லிம் -களுக்கு அர்ப்பணிக்குமாறு வலியுறுத்தினார்கள். இதற்கு ஏற்ப அன்னார் அந்தக் கிணற்றை வாங்கி முஸ்லிம்களுக்காக அர்ப்பணித்தார்கள்.

ஹஸ்ரத் முஹம்மது (ஸல்), ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் பிற நபித் தோழர்கள் மதீனா வருகை தந்து ஆறு ஆண்டுகள் கழிந்திருந்தது. மக்கத்து நிராகரிப்பாளர்கள் தரப்பில் இருந்து ஹஜ் இவர்களுக்கு தடுக்கப்பட்டு விட்டது. இவ்வாறான சூழ்நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஒரு அருளுக்குரிய கனவை கண்டார்கள். அதாவது அன்னார் (ஸல்) 1400, 1500 சஹாபாக்களுடன் கஅபா ஆலயத்தை வலம் வருவதாக கண்டார்கள். இந்த கனவுக்கு ஏற்ப 1400, 1500 நபி தோழர்களுடன் அன்னார் கஅபாவை வலம் வர புறப்பட்டுச் சென்றார்கள். மக்காவிற்கு அருகில் ஹுதைபிய்யா எனும் இடத்தை சென்று சேர்ந்ததும் நபி (ஸல்) அவர்கள் குறைஷிகளுடன் பேச்சு வார்த்தை நடத்த முடிவு செய்தார்கள். இது ஹுதைபிய்யா உடன்படிக்கை என்ற பெயரில் இஸ்லாமிய வரலாற்றில் அறியப்படுகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களை மக்கத்து குறைஷிகளிடம் இஸ்லாத்தின் தூதுவராக அனுப்பி வைத்தார்கள். இஸ்லாத்தின் தூதுவர் என்ற வகையில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் ஹுதைபிய்யாவில் தொண்டாற்றியது அன்னாரின் வாழ்க்கையின் மிக முக்கிய சம்பவமாகும். மேலும் எதிர்கால விளைவுகளை கருத்தில் கொள்ளும் பொருட்டு இது ஒரு மிகப்பெரும் தொண்டு ஆகும்.

ஹுதைபிய்யா ஒப்பந்தத்தின் இரண்டு ஆண்டுக்குப் பின் இறைநியதி இவ்வடிவத்தில் வெளிப்பட்டது. அதாவது ஹிஜ்ரி 8-ஆம் ஆண்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் 10,000 சஹாபிகளுடன் மகத்தான வெற்றிவாகையுடன் மக்காவில் நுழைந்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும்

அவர்களுடன் இருந்தார்கள். இஸ்லாம் பரவப் பரவ முஸ்லிம்களின் எண்ணிக்கை அதிகரித்தது. மஸ்ஜித் நபவி போதுமானதாக இருக்கவில்லை. எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை விரிவுபடுத்த திட்டமிட்டார்கள். மேலும் பள்ளியைச் சுற்றியுள்ள வீடுகளை விலைக்கு வாங்கி பள்ளியுடன் இணைக்க சஹாபாவுக்குக் கூறினார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்குப் பொருளாதார வசதி இருந்து. மேலும் அவர்களிடம் பொருள் தியாகத்தின் ஆர்வம் மிக அதிகம் இருந்தது. அன்னார் 25, 30 ஆயிரம் திர்ஹமுக்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். நபவி பள்ளிக்கு அக்கம் பக்கத்தில் உள்ள வீடுகளை நிலங்களை விலைக்கு வாங்கி நபவி பள்ளியுடன் இணைத்தார்கள். அவர்களின் இந்த அர்ப்பணிப்பு மற்றும் மார்க்கத் தொண்டை மறுமை வரை வருகை தரவுள்ள சந்ததிகள் நினைவில் கொள்வார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தபூக் போருக்கான பொருள் தியாகத் திட்டத்தை முன் வைத்த போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் அந்த சந்தர்ப்பத்தில் ஆயிரம் ஒட்டகங்களைக் கொடுத்தார்கள். அவற்றில் நூறு ஒட்டகங்கள் உணவுத் தானியங்களைக் கொண்டவையாக இருந்தன. நூறு அல்லது 50 குதிரைகள் மற்றும் 10 ஆயிரம் தீனார் ரொக்கமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் மேலான அவையில் வைத்தார்கள். மேலும் போர்ப்படையின் மூன்றில் ஒரு பகுதியினருக்கான தேவையானவை அனைத்தையும் முன் வைத்தார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் இந்த அசாதாரணமான பொருள் தியாகத்தின் பொருட்டு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். இந்தப் போரில் ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களும் கலந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு இஸ்லாத்தின் சேவைக்கான பாக்கியம் கிடைத்த -வற்றில் முக்கியமான ஒரு தொண்டு திருக்குர்ஆனுக்கு நூல் வடிவம் அளித்ததாகும். அன்னார் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்தில் வஹீயை எழுதும் பணியில் இருந்தார்கள். அவர்களுக்கு வஹீயை எழுதுவது மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டலுக்கு ஏற்ப வசனங்கள் மற்றும் அதிகாரங்களை வரிசைப்படுத்தும் பணி செய்வதற்கான சேவையின் வாய்ப்பு கிடைத்திருந்தது. மேலும் இந்த சேவை முழு திருக்குர்ஆன் இறங்கும் வரை தொடர்ந்திருந்தது.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலா∴பத் காலகட்டத்தில் அவர்களுடன் கரங்களாக இருந்து தொண்டு செய்வதற்கான வாய்ப்பு கிடைத்துக் கொண்டிருந்தது.

ஹஸ்ரத் அபூபக்ர் அவர்களின் கிலா∴பத் பணிகளில் அன்னார் மிகவும் மதிப்புமிக்க ஆலோசனைகளை வழங்கி வந்தார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரணத்திற்குப் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) இரண்டாவது கலீ∴பா ஆனார்கள். அன்னார் ஆட்சியை உறுதிப்படுத்து -வதற்கு பல்வேறு துறைகளை உருவாக்கிய போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களிடம் சதக்காக்களின் கணக்குகள் எழுதும் பணியை ஒப்படைத்தார்கள். அன்னார் கிலா∴பத்தின் அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்று அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மீது 23 துல் ஹஜ்ஜா, 23 ஹிஜ்ரியில் கொலை முயற்சி தாக்குதல் தொடுக்கப்பட்டது.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கிலா∴பத் தேர்தலுக் -கான ஒரு குழுவை ஏற்படுத்தினார்கள். அவர்களில் ஹஸ்ரத் உஸ்மான் பின் அ∴ப்∴பான் (ரலி) அவர்களின் பெயர் முதலில் இருந்தது. தாக்குதலுக்கு நான்கு நாள் பிறகு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் 27 துல் ஹஜ்ஜா 23 ஹிஜ்ரியில் மரணம் அடைந்தார்கள். மூன்று நாட்களுக்குப் பிறகு ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் பெரும்பான்மையினரின் கருத்துக்கு ஏற்ப மூன்றாவது கலீ∴பாவாக தேர்வு செய்யப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் எந்த ஆட்சி அமைப்பை விட்டுச் சென்றார்களோ அதனை அன்னார் தொடர்ந்தார்கள். எந்தவித குறிப்பான மாற்றமும் செய்யவில்லை என்றாலும், பிறகு அவசியத்திற்கு ஏற்ப அன்னார் சில ஆளுநர்களை மாற்றினார்கள். அன்னார் முழு இஸ்லாமிய உலகமும் ஜுமுஆ தொழுகையை நிறைவேற்றுவதில் சிறப்பான கவனத்தை செலுத்தினார்கள். மேலும் ஜுமுஆ தொழுகைக்கு முன்னர் இரண்டாவது பாங்கு சொல்வதை அன்னார் (ரலி)




ஆரம்பித்தார்கள். ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலா∴பத் காலகட்டத்தில் பல புதிய கட்டடங்கள் கட்டப் -பட்டன. விரிவான கட்டட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. பொதுமக்களுக்கான பணிகள் நடந்தன. பல பொதுக் கட்டடங்கள், வீதிகள், பாலங்கள், பயணியர் விடுதி தங்கும் விடுதிகள் கட்டப்பட்டன.

கிலா∴பத் காலத்தில் எந்தப் பகுதிகள் வெற்றி கொள்ளப்பட்டனவோ அங்கு இராணுவ தளம் அமைக்கப் -பட்டது. இதே போன்று சமுதாயத்தின் மேய்ச்சல் நிலங்கள் விரிவுபடுத்தப்பட்டன. மேலும் மக்களுக்கு முன்பை விட அதிகமான வசதி வாய்ப்புகள் செய்து தரப்பட்டன.

ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் கிலா∴பத் காலத்தில் நாடு நாடாக வெற்றிகள் கிடைக்கப் பெற்றன.

மேலும் மக்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்தார்கள். அந்த இஸ்லாமிய நாடுகளில் கிலா∴பத் மற்றும் தலைமைத்துவம் இரண்டையும் முற்றுப் பெறச் செய்ய மறைமுகத் திட்டத்தின் அடிப்படையில் யமனைச் சார்ந்த மிகவும் கீழ்த்தரமான, மோசமான இயல்பைக் கொண்ட ஒரு யூதன் அப்துல்லாஹ் பின் சபாவின் தலைமையில் அபாயகரமான குழப்பம் தலை தூக்க துவங்கியது. ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் ஷஹாதத் வடிவில் அந்த குழப்பங்களின் விளைவுகள் வெளிப்பட்டன.

ஷஹாதத்தின் போது ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) அவர்களின் வயது 82 ஆக இருந்தது. அன்னார் மிகவும் இறையச்சம் உடையவராகவும், தீமையிலிருந்து தவிர்ந்திருப்பவராகவும் மற்றும் இறைநம்பிக்கை கொண்ட மனிதராகவும் இருந்தார்கள். அன்னாரின் முழு வாழ்வும் இஸ்லாத்தின் தொண்டு மற்றும் வணக்க வழிபாடுகளில் கழிந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு தனிப்பட்ட அன்பு இருந்த அந்த நபி தோழர்களில் ஒருவராக அன்னாரும் இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தம் வாழ்வில் பல தருணங்களில் அன்னாருடன் திருப்தி கொண்டதாக கூறியுள்ளார்கள். அன்னார் இஸ்லாத்தின் உயர்வுக்காகவும் திருக்குர்ஆன் வெளியீடு மற்றும் கிலா·.பத்தை நிலை நிறுத்துவதற்கு தமது செல்வம், உயிர், நேரம் மற்றும் கண்ணியம் ஆகிய அனைத்தையும் தியாகம் செய்தார்கள். மிகவும் நன்றி உணர்வுடன் இறை பணிகளில் ஈடுபட்டிருந்தார்கள். மேலும் குழப்பத்தின் போது ஆற்றல் மற்றும் வலிமை இருந்தும் அமைதியின் இளவரசராக இருந்து பொறுமையின் எவ்வாறான முன்னுதாரணத்தைக் காட்டினார்கள் என்றால், எதிர்கால சந்ததிகள் மறுமை வரை அன்னாரின் முன்னுதாரணத்திலிருந்து படிப்பினை கற்று வருவார்கள். இன்ஷா அல்லாஹ்.

## ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் (ரலி) அவர்களின் நற்குறிப்பு

தற்போது கம்பீரமான சஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் (ரலி) அவர்களின் தூய வாழ்க்கை தொடர்பாக சில விஷயங்களைக் கூறுவேன்.

ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அருளுக்குரிய கரங்களில் பைஅத் செய்தவர்களின் வரலாற்றைப் படிக்கும் போது ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபாவின் அனைத்து பழக்க வழக்கங்களும் நல்ல குணங்களும் அனைத்து உயர்த் தரங்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபாவிடம் இருக்கிறது என்பது எவ்வித சந்தேகமின்றி தெரிய வருகிறது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கண்ணியத்திற்குரிய சஹாபி ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் அவர்களின் தூய வாழ்க்கையின் தேர்ந்தெடுத்த சம்பவங்களை எடுத்து வைக்கின்றேன்.

ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் (ரலி) அவர்கள் மதிப்புமிக்க கௌரி குடும்பத்தைச் சார்ந்தவர். அன்னார் மாலேர்கோட்லா வட்டாரத்தின் தலைவராவார்கள். அவர்களின் வம்சத்தில் பிரபல்யமானவரான சேக் சதர் ஜஹான் சாஹிப் இறை நெருக்கம் பெற்ற பெரியாராக இருந்தார்கள். ஜலாலாபாத் சர்வாணி சமூகத் தலைவராக இருந்தார்கள். அன்னாரின் தந்தை பெயர் நவாப் குலாம் முகமது கான் சாஹிப் ஆகும்.

அன்னார் (ரலி) 1870 ஜனவரியில் நவாப் பேகம் அவர்களுக்கு பிறந்தார்கள். அன்னார் தன் தாய் வழியில் முதலும், மற்ற சகோதரர்களில் மூன்றாவது நபராகவும் இருந்தார்கள். சிறு வயது முதல் அன்னாருக்கு மார்க்கத்தில் ஆர்வமும் ஈடுபாடும் உருவாகி இருந்தது. ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் நேரடி தொடர்பு ஏற்படுவதற்கு முன் ஹஸ்ரத் நவாப் சாஹிப் குடும்பத்தில் ஒரு கண்ணியமான நபரின் நல்ல தொடர்பு ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் உருவாகி இருந்தது. இது இறுதியில் ஹுஸூர் அவர்கள் மாலேர்கோட்லா வருகை புரிவதற்கு காரணமாக அமைந்தது.

1884-ல் ஹுஸூர் அவர்கள் இந்தப் பயணத்தை மேற்கொண்டதற்குக் காரணம் நவாப் இப்ராஹிம் அலீ கான் சாஹிப் அவர்கள் பராஹீனே அஹ்மதிய்யாவின் வெளியீட்டில் பங்கு எடுத்ததற்கும், மேலும் அவர்கள் நோய்வாய்ப்பட்ட செய்தி கேட்டு துஆவிற்கும் வேண்டி வருகை தந்தார்கள். அதன் மூலம் நலம் விசாரித்தல் மற்றும் நன்றி தெரிவிக்கும் செயலின் ஆன்மா தென்பட வேண்டும் என்பது நோக்கமாகும்.

ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களின் வளர்ப்பு ஆரம்பம் தொட்டு மார்க்க சூழலில் அமைந்திருந்தது. வயதின் ஆரம்பத்தில் அன்னார் தமது ஆசிரியர் மூலம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் பற்றி கேட்டிருந்தார்கள். அன்னார் மீது மார்க்கத்தின் பெரும் தாக்கம் ஏற்பட்டிருந்தது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அந்த நாட்களில் எவ்வித வாதமும் செய்யவில்லை. சிறுகச் சிறுக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் செய்தி அன்னாருக்கு கிடைத்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் கடிதத் தொடர்பு 1889-இல் தொடங்கி இருந்தார்கள். ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் அவர்கள் கி.பி. 1890-இல் 20 வயதில் காதியான் வரலாற்று பயணத்தை மேற்கொண்டார்கள். அன்னாரின் இயல்பில் நன்மையின் தாக்கம் இறைவன் புறமிருந்து அமானிதமாக ஒப்படைக்கப்பட்டிருந்தது. அன்னார் இந்த பயணத்தை உண்மையை அறிந்து கொள்ள மேற்கொண்டார்கள். ஏனெனில் அப்போது வரை அன்னார் அஹ்மதிய்யத்தின் வட்டத்தில் வரவில்லை. பிறகு, சில கேள்விகளுக்குத் திருப்திகரமான பதில் கிடைத்த பின்னர் அன்னார் எவ்வித தாமதமும் இன்றி பைஅத்திற்கான கடிதம் எழுதினார்கள். பைஅத் வரிசைப் பதிவேட்டில் அன்னாரின் வரிசை எண் 210 ஆகவும் பைஅத் தேதி 19 நவம்பர் 1890 எனவும் பதியப்பட்டுள்ளது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் தமது இஸாலா அவ்ஹாம் என்ற நூலில் ஹஸ்ரத் நவாப் சாஹிப் மற்றும் அன்னாரின் குடும்பம் பற்றி குறிப்பிட்டுள்ளார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களுக்குத் தமது கடிதத்தில் சில காலம் ஹுஸூர் அவர்களின் அருகில் வந்து இருக்க மீண்டும் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்கள். ஹுஸூர் அவர்கள் ஒரு கடிதத்தின் இறுதியில் 27 டிசம்பர் 1892 ஜல்ஸாவில் எவ்வாறாயினும் அவசியம் வருகை தருவதை நான் எதிர்பார்க்கின்றேன் எனக் குறிப்பிட்டு இருந்தார்கள்.

இதற்கு ஏற்ப ஹஸ்ரத் நவாப் சாஹிப் இந்த ஜல்ஸாவில் பங்கெடுத்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் கவனம், பரிவு மற்றும் துஆவின் காரணமாக அல்லாஹுத்தஆலா தன் அருளால் நவாப் சாஹிப் அவர்களுக்கு அனைத்து சிரமங்களையும் எளிதாக்கி கொடுத்தான். மன விருப்பத்துடன் காதியான் ஹிஜ்ரத் செய்வதற்கான வாய்ப்பை வழங்கினான். ஹிஜ்ரத்திற்கு பின்னர் அன்னார் முழுமையடையாத இரு அறைகளில் வந்து தங்கினார்கள். அது அத் தாருடன் இணைந்து இருந்தது.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் பரிவு அவ்வப்போது வெளிப்பட்டு வந்தது. ஹுஸூர் (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களை காதியானில் வீடு கட்டுவதற்குப் பலமுறை கூறியுள்ளார்கள். இறைவன் அன்னாரின் வீடுகளில் அதிக பரக்கத்தை வழங்கியிருந்தான். ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களின் முதல் மனைவியின் மூலம் இரண்டு மகள்கள் ஒன்று அமத்துஸ் ஸலாம். அவர் சில மாதத்திற்குப் பிறகு மரணித்து விட்டார். இரண்டாவது மகள் ஹஸ்ரத் பூ ஜைனப் பேகம் சாஹிபா ஹஸ்ரத் மிர்ஸா ஷரீ∴ப் அஹ்மது சாஹிப் அவர்களின் மனைவி ஆவார்கள். அவர்கள் 19 மே 1893-ல் பிறந்தார்கள். அவர்களுக்-குப் பிறகு நான்கு மகன்களை அல்லாஹ் வழங்கினான்.




இறை நியதியின்படி 17 பிப்ரவரி 1908-ல் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மூத்த மகள் ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்களின் நிக்காஹ் ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் அவர்களுடன் நடைபெற்றது. இந்த நிக்காஹ்வை ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் நடத்தினார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு 14 மார்ச் 1909-இல் ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்களின் திருமண வழி அனுப்புதல் நடைபெற்றது. ஹஸ்ரத் நவாப் சாஹிப் வீட்டிற்கு வந்தார்கள். ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களின் முதல் மனைவியின் ஒரே மகளான ஹஸ்ரத் பூ ஜைனப் பேகம் சாஹிபா அவர்களின் நிக்காஹ் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் அன்பிற்குரிய மகனான ஹஸ்ரத் மிர்ஸா ஷரீ∴ப் அஹ்மது சாஹிப் அவர்களுடன் 9 மே 1909-இல் நடைபெற்றது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது அருளுக்குரிய வாழ்நாளில் இந்த வரனை முடிவு செய்திருந்தார்கள். ஹஸ்ரத் பூ ஜைனப் பேகம் சாஹிபா அவர்கள் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யஹுஹுல்லாஹ்...) அவர்களின் கண்ணியத்திற்-குரிய தாதி அதாவது பாட்டியாவார்கள். நவாப் சாஹிப் அவர்களுக்கும் நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்களுக்கும் இடையில் 27 வருட வயது வித்தியாசம் இருந்தது என்றாலும் கூட, ஹஸ்ரத் நவாப் சாஹிப் ஹஸ்ரத் நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்களின் அறிவு, புரிதல், அன்பு, நன்றி உணர்வு மற்றும் வாழ்வின் முக்கியத்துவம் புரிந்தவர்களாக இருந்தார்கள். இவர் தூய தந்தையின் புனிதமான மகள் ஆவார் என்பதை அன்னார் அறிந்திருந்தார்கள். ஹஸ்ரத் நவாப் சாஹிப் சிறு சிறு விஷயத்திலும் ஹஸ்ரத் பேகம் சாஹிபாவிடம் பரக்கத்தைப் பெற முயற்சி செய்வார்கள்.

ஒருமுறை புது வருட காலண்டரை அன்னார் ஹஸ்ரத் பேகம் சாஹிபாவிடம் கொடுத்து அதில் சில கவிதைகளை எழுதுங்கள் என்றார்கள். ஹஸ்ரத் பேகம் சாஹிபா அவர்கள் காலண்டரின் முதல் பக்கத்தில் இவ்வாறு எழுதினார்கள்: இறைவனின் அருளின் நிழல் நம் மீது எப்போதும் இருக்கட்டும். எல்லா பகலும் முபாரக்காக உதிக்கட்டும். எல்லா இரவும் நன்மையாக கழியட்டும்.

நவாப் முபாரகா பேகம் சாஹிபா அவர்கள் கூறுகிறார்கள்: இந்தக் கவிதையை ஹஸ்ரத் நவாப் சாஹிப் எப்பொழுதும் புது வருட காலண்டரின் முதல் பக்கத்தில் எழுதி கொள்வார்கள். இதைப் போன்று ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்கள் எப்போதும் அன்னாரிடம் கவிதை எழுத கோரிக்கை வைப்பார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களை காதியான் வருமாறும் காதியானில் வீடு கட்டுமாறும் திட்டத்தை பலமுறை எடுத்து வைத்தார்கள். அதற்கு இணங்க ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்கள் ஹிஜ்ரத்திற்கு முன்னர் ஓரிரு அறைகளை தாருல் மஸீஹுடன் இணைந்த கிழக்குப் பகுதியில் கட்டி இருந்தார்கள். சில வருடங்-களுக்குப் பிறகு அதை இடித்து விட்டு ஒரு உறுதியான குடிலைக் கட்டினார்கள். இந்தக் குடிலும் அத் தாருடைய பகுதி-யாகவே உள்ளது. முதல் கிலா∴பத்தின் போது அன்னார் காதியானின் அப்போதைய குடியிருப்பில் இருந்து தொலைவில் திறந்த வெளியில் தாருஸ் ஸலாமில் வீடு கட்டினார்கள். அதில் தோட்டமும் அமைத்தார்கள்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களுக்கு காதியான் வரும்போது தமது ∴போனோகிரா∴பை உடன் எடுத்து வரவும், அதன் மூலம் வெளிநாடுகளில் த∴வத்தே இலல்லாஹ் தொடர்பாக சில தூதுச் செய்திகளைப் பதிவு செய்யலாம் என கடிதம் அனுப்பினார்கள். அதற்கேற்ப ஹஸ்ரத் நவாப் சாஹிப் ∴போனோகிரா∴பை காதியான் கொண்டு வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் ∴போனோகிரா∴பில் இருந்து ஓசை வருகிறது என்ற நஸ்மும் மேலும் சில வேறு நஸ்ம்களும் சொற்பொழிவுகளும் பதிவு செய்யப்பட்டன. ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களுடைய ∴போனோகிரா∴பில் வெளிநாட்டவர்க்கு என்று த∴வத்தெ இல்லல்லாஹ்வின் தூதுச் செய்தி பதிவு செய்யும் இந்த அருளுக்குரிய பாக்கியமும் அவர்களுக்குக் கிடைத்தது.

ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்கள் மக்களின் உணர்வுகளை மதிக்கக் கூடியவராகவும் விவகார ஞானம் மற்றும் நன்றி உணர்வு கொண்ட பெரியாராக இருந்தார்கள். இறைவன் அன்னாருக்கு மென்மையான உள்ளமும் பரந்த அறிவும் வழங்கியிருந்தான். எனவே அன்னார் அனைத்து விவகாரங்களிலும் தாமே ஆய்வு செய்வார்கள். காழ்ப்புணர்ச்சி, கோபம் ஒருபோதும் இருந்ததில்லை. உண்மையை ஏற்றுக் கொள்ள எப்பொழுதும் ஆயத்தமாக இருப்பார்கள். ஆரம்ப மார்க்கக் கல்விக்குப் பிறகு லாஹூர் Aitchison கல்லூரியில் சேர்ந்தார்கள். இது பஞ்சாபின் பாரம்பரிய குடும்பத்தைச் சேர்ந்த குழந்தைகளுக்கு அரசு ஏற்படுத்திய கல்விக்கூடம் ஆகும்.

பெண்களுக்கான சீர்திருத்தத்திற்கு முஸ்லிஹில் இஹ்வான் என்ற ஓர் அமைப்பை அன்னார் நிறுவினார்கள். மேலும் ஒரு பள்ளிக்கூடத்தை நிறுவினார்கள். அதன் முழு

செலவினங்களை அன்னார் தம் தரப்பிலிருந்து செலுத்தினார்கள். கல்வியை பொதுவுடைமையாக்க வேண்டும் என்ற விருப்பம் அன்னாருக்கு அதிகம் இருந்தது. மதரஸா அஹ்மதிய்யாவிற்குப் பலமுறை பொருள் உதவி செய்துள்ளார்கள். அன்னாரின் மேலான துணிவின் விளைவால் காதியானில் கல்லூரி நிறுவப்பட்டது.

அன்னாரின் இயல்பில் வள்ளல் தன்மையின் வேகம் இருந்தது. மேலும் ஜமாஅத்தின் ஏழைகள் அன்னாரின் கொடையினால் நிம்மதியான வாழ்வைக் கழித்து வந்தார்கள். அன்னார் கவலையில் அல்லது ஆழ்ந்த சிந்தனையில் ஒருபோதும் இருந்ததில்லை. எப்பொழுதும் முக மலர்ச்சியுடனும் புன்சிரிப்புடனும் இருப்பார்கள். மேலும் இறைவன் மீது முழுமையான திடநம்பிக்கை இருந்தது. பணிவின் நிலை எவ்வாறானதாக இருந்தது எனில், மஸ்ஜிது முபாரக்கில் அனைவருக்கும் இறுதியில் காலணிகள் அருகில் அமர்ந்திருப்பார்கள். ஜமாஅத்தின் பணிகளில் எப்போதும் முன்னணியில் இருப்பார்கள்.

ஹஸ்ரத் நவாப் சாஹிப் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களுடன் முதல் தர மனத் தூய்மை மற்றும் கட்டுப்படுதலின் தொடர்பைக் கொண்டிருந்தார்கள். இதன் காரணமாகவே ஹஸ்ரத் முதல் கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் இறுதி இரண்டு வார நோயின் போது அவர்களுக்குப் பணிவிடை செய்யும் சிறந்த சந்தர்ப்பம் ஹஸ்ரத் நவாப் சாஹிப் அவர்களுக்குக் கிடைத்தது. குடியிருப்பில் இருந்து வெளியே ஏதேனும் பறந்த இடத்தில் இருக்க மருத்துவர்கள் ஆலோசனை கூறியதும் ஹஸ்ரத் நவாப் சாஹிப் தமது கோட்டி (மாளிகை) தாருஸ்சலாம் உடைய ஒரு பகுதியை ஹுஸுர் (ரலி) அவர்களுக்காக ஒதுக்கினார்கள். ஹஸ்ரத் முதல் கலீ∴பதுல் மஸீஹ் (ரலி) அவர்கள் 27 பிப்ரவரி 1914 அன்று வீடு மாற்றம் செய்து இங்கு வந்தார்கள். மேலும் இந்த இடத்தை அதிகம் விரும்பினார்கள். இரண்டு வாரங்களுக்கு பின் 13 மார்ச் 1914-ல் ஹஸ்ரத் முதல் கலீ∴பதுல் மஸீஹ் (ரலி) அவர்கள் தாருஸ்ஸலாம் மாளிகையிலேயே மரணம் அடைந்தார்கள்.

1903 ஜனவரி 1 அன்று காலை நடைபயணம் வரும்போது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நவாப் சாஹிபை அழைத்துக் கூறினார்கள்: இன்று இரவு ஒரு ஆன்மிக காட்சியில் உங்கள் நிழல் படம் நம் முன் வந்தது. மேலும் ஹுஜ்ஜதுல்லாஹ் என்ற சொல் மட்டும் இல்ஹாம் ஆக வந்தது. இது பற்றி இவ்வாறு விளக்கம் கிடைத்தது. ஏனெனில் நீங்கள் உங்கள் உறவினர்கள் மற்றும் சமூகத்தை விட்டு விலகி வந்துள்ளீர்கள். எனவே இறைவன் உங்கள் பெயரை ஹுஜ்ஜதுல்லாஹ் என வைத்துள்ளான். அதாவது நீங்கள் அவர்கள் மீது ஹுஜ்ஜத்தாக அதாவது அத்தாட்சியாக இருப்பீர்கள்.

அன்னார் பல சந்தர்ப்பங்களில் பொருள் தியாகங்களில் பல்வேறு திட்டங்களில் பங்கெடுத்துள்ளார்கள். வழங்கி உள்ளார்கள் கட்டிடப் பராமரிப்பு மற்றும் விரிவுபடுத்து -வதற்காக அவ்வப்போது தேவைப்படும் போதெல்லாம் தொகை ஏற்பாடு செய்துள்ளார்கள். அவற்றில் மத்ரஸா அஹ்மதிய்யா, மினாரத்துல் மஸீஹ், மர்கஸின் நூலகம் போன்றவையும் உள்ளன. அன்னார் காதியானில் பொது பணிகளுக்கான அதிகமான வேலைகளைச் செய்துள்ளார்கள். தெருக்களைச் சமன் செய்துள்ளார் -கள். உறுதியான வடிகால்களை ஏற்படுத்தி உள்ளார்கள். மேலும் நோயாளிகளின் உதவிக்காக ஒரு பெரும் தொகையை வழங்கினார் -கள். இவை தவிர ஜமாஅத்தின் முதல் பத்திரிக்கை அல்ஹகமிற்கு உதவித்தொகை, இயலாதோர் இல்லத்திற்கு நிலம், அல்∴பஸ்ல் வெளியீட்டுக்கு உதவித்தொகை அன்னாரின் பொருள் தியாகத்தின் உயரிய உதாரணங்களாகும்.



அல்∴பஸ்லின் பிரசுரிப்புக்கு வேண்டி சில ரூபாய்கள் ரொக்கமாகவும் சில நிலங்களை அதன் பணிகளுக்காகவும் கொடுத்தார்கள். மேலும் தன் வீட்டின் கீழ் தளத்தையும் கொடுத்தார்கள். அடக்கஸ்தல ஏற்பாட்டிற்கு ஹஸ்ரத் மவ்லவி நூருத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நிறுவி இருந்தார்கள். ஜனவரி 1906-இல் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யா நிறுவப்பட்டபோது, அதன் உறுப்பினர்களில் ஹஸ்ரத் நவாப் சாஹிபும் இருந்தார்கள். 1900 முதல் 1918 வரை பல்வேறு பொறுப்புகளில் ஜமாஅத்துக்குத் தொண்டாற்றும் சந்தர்ப்பங்கள் கிடைத்தன. 6 ஜனவரி முதல் 5 டிசம்பர் 1902 வரை அன்னார் முதலில் ரிவியூ ஆ∴ப் ரிலிஜியன் பத்திரிகையின் துணைப் பொருளாளராக இருந்தார்கள். பிறகு பைனான்சியல் செக்ரட்டரி ஆக பணியாற்றினார்கள். 1909-ல் சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் அமீன் ஆக நியமிக்கப்பட்டார்கள். 1911 -இல் அன்னார் சத்ர் அஞ்சுமன் தரப்பிலிருந்து நாஸிராக நியமிக்கப்பட்டார்கள். 1915 மற்றும் 1916 இரண்டு ஆண்டுகள் வரை சத்ர் அஞ்சுமன் அஹ்மதிய்யாவின் ஜெனரல் செக்ரட்டரி ஆக ஹஸ்ரத் நவாப் சாஹிப் பொறுப்பு வகித்தார்கள்.

ஹஸ்ரத் நவாப் சாஹிப் ஒழுக்கம் (அதப்) மற்றும் மனனம் (ஹி∴ப்ஸ்) முறைகளை அதிகமாக கடைபிடிப்பவர் -களாக இருந்தார்கள். பெரும்பாலும் தம் சந்ததிகள் மற்றும் பிறருக்கும் இதன் பக்கம் கவனமூட்டுவார்கள். அன்னார் தம் மூத்த சகோதரர்கள், கண்ணியத்திற்குரிய பெரும் சஹாபிகள் மற்றும் குடும்பத்தார்கள் மீது உயர்தர மதிப்பினைக் கொண்டவராக இருந்தார்கள். பொறுமை மற்றும் உறுதியாக நிலைநிற்றலின் உயரிய தரத்தைப் பெற்றவராக இருந்தார்கள்.

அன்னார் அஹ்மதிய்யத்தை எந்நிலைமையில் ஏற்றுக் கொண்டார்களோ மேலும் அதனை வீரத்துடன் வெளிப்படுத்தி -னார்களோ அது அவர்களுக்கே உரித்தானதாகும். அன்னார் மேலான உயர்தர தூய்மை விரும்பியாக இருந்தார்கள். மேலும் தொழுகை மற்றும் நோன்பை நிறைவேற்றுவது திருக்குர்ஆன் திலாவத் செய்வது மற்றும் பிற மார்க்கப்

*(தொடர்ச்சி 17-ஆம் பக்கம்...)*

# நம்பிக்கை கொண்ட பெண்களின் அடையாளங்களும் தற்காலத்தில் அவற்றைப் பெறுவதற்கான வழிமுறையும்

ஜனாபா அமத்துன் நஸீர் புஷ்ரா சாஹிபா

தமிழாக்கம்: இப்னு வஸீம்

*(தொகுதி 3 இதழ் 5-ன் தொடர்ச்சி ...)*

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தமது சொற்பொழிவில் அஹ்மதிப் பெண்களுக்கு அறிவுரைகளை வழங்கியவாறு கூறுகிறார்கள்:

“அஹ்மதிப் பெண்களே! பெண் பிள்ளைகளே! இந்தக் காலத்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் பைஅத்தில் வந்து, நாங்கள் இறையச்சத்தில் நிலைத்திருப்போம் என்று உறுதி கூறக் கூடிய பெண்களே! நாங்கள் உலகக் கேளிக்கைகளை விட்டு விலகியிருப்போம் என்று அறிவிப்புச் செய்யக் கூடிய பெண்களே! திருக்குர்ஆனின் கட்டளைக்கு ஏற்ப எங்கள் அழகைப் பாதுகாப்போம் என்று அறிவிப்புச் செய்யக் கூடிய பெண்களே! எங்களுடைய செல்வங்களை உலக இன்பங்களுக்குப் பதிலாக மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவு செய்வோம் என்று உறுதி கூறக் கூடிய பெண்களே!

உங்களை சுய ஆய்வு செய்யுங்கள். மேலும், பாருங்கள்! நீங்கள் எந்த அளவுக்கு அல்லாஹ்வின் விருப்பமின்மையில் இருந்து தப்பித்தவாறு உங்களுடைய வாழ்வைக் கழிக்கிறீர்கள். உலகவாதத்தின் ஏமாற்றத்திலிருந்து எந்த அளவுக்கு உங்களைக் காத்துக் கொள்கிறீர்கள். உங்களுடைய உறுதிமொழிகளை எந்த அளவுக்கு நிறைவேற்றுகின்றீர்கள். அல்லாஹ்வின் எல்லையற்ற கருணைகளின் விசாலங்களைத் தேடுவதில் எந்த அளவுக்குத் தீவிரமாக ஈடுபட்டுள்ளீர்கள். ஓர் உண்மையான நம்பிக்கை கொண்ட பெண்ணாகி அல்லாஹ்வின் அருள்களுக்கு எந்த அளவுக்கு வாரிசாகிறீர்கள்.

உங்களுடைய கணவன்மார்களின் இல்லங்களின் கண்காணிப்பாளராகி, உங்களுடைய சந்ததிகளைக் கேளிக்கைகளின் பயங்கரமான தாக்குதல்களில் இருந்து காப்பாற்றுவதற்கு எந்த அளவுக்கு முயற்சி செய்கிறீர்கள். நீங்கள் எப்பொழுதும் அல்லாஹ்வுடைய அருள்களை ஈர்த்தவாறு, அவனது அருளுக்கு வாரிசாகிக் கொண்டே செல்லும் பொருட்டு, நீங்கள் உங்களுடைய கணவன்மார்களின் மார்க்கத் தன்மான உணர்வைத் தூண்டுவதற்கு எந்த அளவுக்கு முயற்சி செய்கிறீர்கள்.

அல்லாஹ் ஒவ்வோர் அஹ்மதிப் பெண்ணையும், ஆணையும் அவனுடைய அருள்கள், பாவமன்னிப்பு மற்றும் திருப்தியைப் பெறுவதற்காக முன்னரை விட அதிகம் முயற்சி செய்பவர்களாக ஆகச் செய்வானாக! (ஜூன் 29, 2013 அன்று ஜெர்மனி ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் பெண்களுக்காக நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)

அக்டோபர் 30, 2021 அன்று வட இங்கிலாந்து மற்றும் ஸ்காட்லாந்தைச் சேர்ந்த 13 முதல் 15 வயது வரையிலான நாஸிராத்துல் அஹ்மதிய்யா உறுப்பினர்களுக்கு சய்யிதுனா ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் மெய்நிகர் சந்திப்பு (Virtual Meeting) நிகழ்ந்தது. அதில் ஒரு நாஸிராத் பெண் பிள்ளை ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களிடம் இவ்வாறு கேள்வி கேட்டார். சமூகத்தில் உள்ள மன நோய்கள் மற்றும் மன அழுத்தம் பற்றிய தங்களது கருத்து என்ன?

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:

சில வேளைகளில் மன நோய்கள் ஏன் உருவாகின்றன என்றால், நாம் மிக அதிகம் உலகவாதத்தில் ஈடுபடுகிறோம். ஆசைகள் மற்றும் விருப்பங்களுக்கு நாம் அளிக்கும்




முன்னுரிமைகளும் மாறி விட்டன. அல்லாஹ்வின் மீதான நேசம் மற்றும் இறைநெருக்கத்தில் அதிகரிப்பதற்குப் பதிலாக, நாம் உலக விஷயங்களுக்குப் பின்னால் ஓடுகிறோம். இது இதற்கான அடிப்படைக் காரணம் ஆகும். உலக ஆசைகள் நிறைவேறாத போது, நீங்கள் விரும்புவது உங்களுக்குக் கிடைக்காத போது, பிறகு உங்களுக்கு அவநம்பிக்கை ஏற்படும். மேலும், இந்த

அவநம்பிக்கை பிறகு, மன உளைச்சலில் அதிகரிக்கச் செய்கிறது.

எனவேதான் அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகிறான்: மன அமைதியைப் பெறுவதற்கான சிறந்த வழிமுறை அல்லாஹ்வை நினைவு கூர்வதாகும். மேலும், (அதன் மூலம்) மன நிம்மதி கிடைக்கிறது. எனவே, உங்களுக்கு எப்பொழுது ஒரு பிரச்சனை வந்தாலும் அல்லாஹ்வை நினைவு கூருங்கள். அவனுக்கு முன்னால் குனியுங்கள். ஐவேளைத் தொழுகைகளை முறையாகவும், மனத்தூய்மையுடனும் நிறைவேற்றுங்கள். பிறகு, அல்லாஹ் உங்களுக்கு நிம்மதியை அளிப்பான். மனஅமைதியை வழங்குவான். அதன் விளைவாக நீங்கள் நிம்மதியாகவும் மிகவும் நன்றாகவும் உணர்வீர்கள்.

தற்காலத்தில் நவீன தொழில் நுட்பத்தையும், ஊடகத்தையும் தவறாகப் பயன்படுத்துவது ஐயமின்றி ஒரு ஷைத்தானிய செயலாகும். இப்படிப்பட்ட ஷைத்தானிய தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்காக துஆக்களின் முக்கியத்துவம் முன்னரை விட அதிகரித்து விடுகிறது. இது தொடர்பாக ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஸ்வீடனின் கோட்டன் பர்கில் உள்ள நாஸிர் பள்ளிவாசலில் மே 20, 2016 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் கூறுகிறார்கள்:

“ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுக்கு, நம்பிக்கை கொண்டவர்களை ஷைத்தானின் தாக்குதல்களில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கவலை எந்த அளவுக்கு இருந்தது! ஹுஸூர் (ஸல்) அவர்கள் எவ்வாறு தம்முடைய சஹாபாவுக்கு ஷைத்தானிடமிருந்து தப்பிப்பதற்கான துஆக்களைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள்! எப்படிப்பட்ட, அனைத்தையும் உள்ளடக்கிய துஆக்களைக் கற்றுக் கொடுத்து வந்தார்கள்! அதை ஒரு சஹாபி இவ்வாறு எடுத்துரைத்துள்ளார்கள்:


ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் எங்களுக்கு இந்த துஆவைக் கற்றுக் கொடுத்தார்கள்: அல்லாஹ்வே! எங்களுடைய உள்ளங்களில் நேசத்தை உருவாக்கி விடுவாயாக! எங்களைச் சீர்திருத்தி விடுவாயாக! எங்களை சமாதான வழிகளில் நடத்துவாயாக! எங்களுக்கு இருள்களிலிருந்து விடுதலையளித்து ஒளியின் பக்கம் அழைத்துச் செல்வாயாக! எங்களை அக, புற வெட்கக்கேடு -களிலிருந்து காப்பாற்றுவாயாக! எங்களுடைய காதுகளில், எங்களுடைய கண்களில், எங்களுடைய மனைவிமார்களில், எங்களுடைய சந்ததிகளில் எங்களுக்கு பரக்கத்தை வைத்து விடுவாயாக!

எங்கள் மீது கருணையுடன் திரும்புவாயாக! நிச்சயமாக நீயே தவ்பாவை ஏற்றுக் கொள்ளக்கூடியவனும், மீண்டும் மீண்டும் கருணை புரியக்கூடியவனும் ஆவாய். மேலும், எங்களை உன்னுடைய அருட்கொடைகளுக்கு நன்றி செலுத்தக் கூடியவர்களாகவும், அவற்றை நல்ல முறையில் எடுத்துக் கூறுபவர்களாகவும் ஆக்குவாயாக! அவற்றை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக ஆக்குவாயாக! அல்லாஹ்வே! எங்கள் மீது அருள்களை முழுமைபடுத்துவாயாக! (சுனன் அபூதாவூது கிதாபுஸ் ஸலாத் பாபுத் தஷஹ்ஹுது ஹதீஸ் எண். 969)

எனவே, இதுதான் உலகத்தின் வீணானவற்றிலிருந்தும் (நம்மைத்) தடுத்துக் கொள்வதற்கான துஆ ஆகும்.

ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள், தற்காலத்தில் குறிப்பாக, அஹ்மதிப் பெண்களுக்கு, அவர்கள் தங்களுடைய சந்ததிகளின் ஈமானைப் பாதுகாப்பதற்காக அல்லாஹ்வின் கட்டளைகள்படி அமல் செய்யுமாறு வேதனை மிகுந்த அறிவுரை வழங்கியவாறு கூறினார்கள்:

எனவே, ஓர் அஹ்மதிப் பெண் தன்னை உலகின் அசுத்தங்களிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகவும், தனது முடிவு நல்லதாக அமைவதற்காகவும், தான் நல்ல முடிவை நோக்கி அடியெடுத்து வைப்பதற்காகவும் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்துள்ளார். அந்தப் பெண் இந்த சமூகத்தில் பார்த்து பார்த்து அடியெடுத்து வைக்க வேண்டும். தனது ஆடையைப் பார்த்து அணிய வேண்டும். தனது பர்தாவையும் கருத்தில் கொள்ள வேண்டும். தன்னுடைய செய்கைகளைக் கவனித்து செய்ய வேண்டும். தனது உரையாடல் மீது கவனம் செலுத்த வேண்டும்.



ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்: பாக்கிஸ்தானில் இருந்து ஒரு பெண் பிள்ளை என்னிடம், ‘ஹுஸூர்! நான் ஜீன்ஸுடன் நீளமான கமீஸ் (மேல் சட்டை) அணிந்து கொண்டால் என்ன தவறு?’ என்று கேட்டுள்ளார். தாக்கம் ஏற்படுகிறது அல்லவா? ஜீன்ஸுடன் நீளமான கமீஸ் (மேல் சட்டை) அணிந்து கொள்வதில் எந்தத் தவறும் இல்லை என்றே நான் கூறுகிறேன். எந்தத் தீமையும் இல்லைதான். ஆனால், பர்தாவிற்கான எல்லா நிபந்தனைகளும் நிறைவேற வேண்டும். ஆனால், எனக்கு ஒரு விஷயத்தில் அச்சம் உள்ளது. அந்தப் பெண் பிள்ளைக்கும் நான் இதைத்தான் கூறினேன். அதாவது, சில காலங்களுக்குப் பிறகு, இந்த நீளமான கமீஸ் (மேல் சட்டை), அடுத்து குட்டையான கமீஸ் ஆகவும் (மேல் சட்டையாகவும்), பிறகு ப்ளவுஸ் (ரவிக்கை) அளவுக்கும் வந்து விடக் கூடாது.

எனவே, எந்த செயல் Fashion ஆகவோ அல்லது ஒருவர் மற்றவரைப் பார்த்தோ செய்யப்படுகிறதோ, அவற்றில் பிறகு மேற்கொண்டு காலத்துக் ஏற்ப மாறுவதற்கான முயற்சியும் செய்ய ஆரம்பிக்கப்படுகிறது. பிறகு, இன்னும் அறுவருப்புகள் உருவாக ஆரம்பித்து விடுகின்றன. பிறகு, நேரம் வரும் போது நீங்கள் அதை உணர்கிறீர்கள்.

எனவே, எங்கு ஷைத்தானின் தாக்குதலுக்கான ஆபத்து இருக்கிறதோ அந்த வழிகளிலிருந்து எப்பொழுதும் தவிர்ந்திருப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். நீங்களும் உங்களுடைய சந்ததிகளும் ஈமானில் முன்னேற வேண்டும்.

எனவே, அதிகதிகமாக இறைவன் பக்கம் அழைத்துச் செல்லக் கூடிய வழிகளை மேற்கொள்ளுங்கள்.

ஸாகிராத் (எனப்படும் அல்லாஹ்வை நினைவு கூரும் பெண்களாக) ஆவதற்கு முயற்சி செய்யுங்கள். ஆபிதாத் (எனப்படும் அல்லாஹ்வை வணங்கும் பெண்களாக) ஆவதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும், உங்களை எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளைக்கு ஏற்ப மாற்றிக் கொள்வதற்கு முயற்சி செய்யுங்கள். (செப்டம்பர் 4, 2004 அன்று சுவிட்சர்லாந்து ஆண்டு மாநாட்டில் பெண்களுக்காக நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவு)

*இறைவன் அவன் மீதான நேசம் அதிகரித்துக் கொண்டே இருக்கச் செய்வானாக!*

*அவனைக் காண(ப்பெறு)ம் இன்பத்தை உங்களுக்குக் கிடைக்கச் செய்வானாக!*

*இறைவன் (உங்கள்) உதடுகளை ஓரிறைக் கொள்கைக்கு சாட்சி பகரச் செய்வானாக!*

*இறைவன் (உங்கள்) உள்ளத்தில் ஈமானின் இனிமையை இருக்கச் செய்வானாக!*

*இறைவன் (உங்கள்) உள்ளங்களில் ஷரீஅத்தை ஆட்சி செய்ய வைப்பானாக!*

*(உங்களுக்கு) முஸ்த..்பா (ஸல்) அவர்களின் நெருக்கத்தைக் கிடைக்கச் செய்வானாக!*

*உங்களுடைய கையில் திருக்குர்ஆனும் உள்ளத்தில் ஒளியும் இருக்கட்டுமாக.*

*இறைவன் நம்பிக்கை கொண்டவர்களின் நுண்ணறிவை உங்களுக்குக் கிடைக்கச் செய்வானாக!*

(ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் துஆக்களின் சொற்களைக் கொண்ட கவிதை வரிகள்)

*(14-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி ...)*



பணிகளில் எல்லா நேரமும் ஈடுபட்டிருப்பார்கள். இரவு விழித்து தஹஜ்ஜுத் தொழுகையை நிறைவேற்றுவது அன்னாரின் வழக்கமாக இருந்தது. அன்னாரின் மனைவி கண்ணியத்திற்குரிய ஹஸ்ரத் நவாப் முபாரக்கா பேகம் அவர்கள் இதுபற்றி குறிப்பிடுகின்றார்கள்: இரவு தஹஜ்ஜுத்தில் துஆ செய்யும்போது இறைவனின் ஒளி அறையில் இறங்குவது போன்று தெரியவரும்.

ஹஸ்ரத் நவாப் சாஹிப் சுபுஹ் தொழுகைக்கு முன்னர் குர்ஆன் மஜீத் திலாவத் செய்வார்கள். திருக்குர்ஆன் ஒரு கடல் ஆகும். எவரேனும் இந்த கடலில் குதிப்பாரோ அவர் வெறும் கையுடன் திரும்ப மாட்டார் எனக் கூறி வருவார்கள். வழக்கமாக ஹஸ்ரத் நவாப் சாஹிப் டைரி எழுதக் கூடியவராக இருக்கவில்லை. எனினும் எவ்வளவு காலம் டைரி எழுதினார்களோ அதிலிருந்து அன்னாரின் வாழ்க்கைக் குறிப்பின் ஒரு மதிப்பு மிக்க பகுதி அன்னாரின் எழுத்துக்களில் இருந்து நம் முன் வந்துள்ளது. 10 பிப்ரவரி 1945-இல் தமது 75-வது வயதில் ஹஸ்ரத் நவாப் சாஹிப் காலமானார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிஊன்.

அன்னாரின் ஜனாஸாவிற்கு இரண்டாவது கலீ..்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தோள் கொடுத்தார்கள். காதியானில் உள்ள பஹிஷ்தி மக்பரா தோப்புடன் இணைந்த பகுதியில் ஹஸ்ரத் இரண்டாவது கலீ..்பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அன்னார் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ள சிறப்புப் பகுதியிலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அல்லாஹ் அன்னாரின் பதவிகளை உயர்த்துவானாக! அன்னாருக்குத் தன் சிறப்பான நெருக்கத்தின் இடத்தை வழங்குவானாக! ஆமீன்.

ஹஸ்ரத் அக்தஸ் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் உஸ்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் சஹாபி சய்யிதுனா ஹஸ்ரத் முஹம்மது நவாப் முஹம்மது அலீ கான் சாஹிப் ஆகிய தூயவர்களின் வாழ்க்கையின் தேர்வு செய்யப்பட்ட சம்பவங்களை நீங்கள் செவியேற்றீர்கள்.

இந்த சம்பவங்களில் இருந்து வ ஆகரீன மின்ஹும் லம்மா யல்ஹகூபிஹிம் என்பதின் அசல் தோற்றம் நம் முன் தோன்றியுள்ளது. இருவரின் வரலாற்று சம்பவங்களிலும் எந்த அளவு ஒற்றுமையுள்ளன.

ஹஸ்ரத் அக்தஸ் அவர்களின் இந்தக் கவிதை எவ்வளவு உண்மையை அடிப்படையாகக் கொண்டதாக உள்ளது!

“இப்போது ஈமான் கொண்ட அவர் அருளுக்குரியவர். என்னைப் பெற்ற போது சஹாபிகளில் இணைந்தார். அதே பானத்தை அவர்களுக்கு பருகச் செய்பவர் பருகச் செய்து விட்டார். என் எதிரிகளை இழிவு செய்த (என் இறை)வன் தூயவன் ஆவான்.

**பர்தா**

உங்கள் ஆடையைப் பற்றி எப்போதும் கவனத்துடன் இருங்கள். அதனால் உங்கள் நாணத்தை யாரும் கேள்வி கேட்க முடியாது. மேலும் பர்தா ஒரு முஸ்லிம் பெண்ணின் கௌரவத்தையும் கற்பையும் பாதுகாக்கும் வழிமுறையாக இருப்பதில் பெருமை கொள்ளுங்கள். ஒவ்வோர் அஹ்மதி ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒரு வட்டம் உள்ளது. அந்த வட்டத்திற்குள் இருக்க வேண்டிய கடமை அவர்களுக்கு உள்ளது. மேலும் அந்த வட்டம் இஸ்லாம் போதிக்கும் வட்டமே ஆகும். எனவே நம்முடைய வரம்புகள் எந்தவொரு தனி நபராலும் நிர்ணயிக்கப்படவில்லை. மாறாக அவை எல்லாம் வல்ல அல்லாஹ்வினால் நிர்ணயிக்கப்பட்டவை ஆகும்.

– ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...)




பழக்கவழக்கங்களே மனிதனை உருவாக்கவும் செய்கின்றன. சீர்குலைக்கவும் செய்கின்றன. தீங்கு தரும் பின்விளைவுகளைத் தரக்கூடிய தீய பழக்கத்திற்கு ஆளாகி அதிலிருந்து மீள முடியாமல் இருப்பதைப் பழக்க அடிமைத்தனம் என்கிறோம். பழக்க அடிமைத்தனம் மனிதனின் உடல், மன ஆரோக்கியத்திற்கு ஊறுவிளைவித்து அவனது வாழ்வைப் பாழ்ப்படுத்துகிறது. இது ஒரு நோய் நிலையாகவும் கருதப்படுகிறது

பொதுவாக இருவகை பழக்க அடிமைத்தனங்கள் காணப்படுகின்றன. ஒன்று, பொருள் சார்ந்த பழக்க அடிமைத்தனம் (Substance addiction). மற்றொன்று, நடத்தை சார்ந்த பழக்க அடிமைத்தனம் (Behavioural addiction). பொருள் சார்ந்த பழக்க அடிமைத்தனம் என்பது மனிதன் ஏதாவது ஒரு பொருளைத் தொடர்ந்து உண்பதாலோ, குடிப்பதாலோ அல்லது தனது உடலில் உட்செலுத்திக் கொள்வதாலோ ஏற்படுத்திக் கொள்வதாகும். உதாரணமாக புகையிலை, மது, போதைப் பொருட்களான கஞ்சா, அபின் போன்றவற்றிற்கு மனிதன் அடிமையாவது இந்த வகையைச் சார்ந்ததாகும். நடத்தை சார்ந்த பழக்க அடிமைத்தனம் என்பது ஒருவரால் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் ஒரு நடத்தையால் ஏற்படுவதாகும். உதாரணமாக, சூதாட்டம், இணையதள அடிமைத்தனம், குறிப்பிட்ட டி.வி நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பார்த்தல், இணையத்தில் பாலியல் படங்கள், கார்ட்டூன்கள் பார்த்தல் போன்றவையாகும். இன்றைய சமூகம் இந்த இருவகை பழக்க அடிமைத்தனங்களாலும் புரையோடிப் போயிருப்பது நிதர்சமான உண்மையாகும்.

## மனித வாழ்வின் நோக்கம்

மனித வாழ்வின் நோக்கம் இறைவணக்கமே என்று திருக்குர்ஆன் கூறுகிறது. நான் மனிதர்களையும் ஜின்களையும் என்னை வணங்குவதற்காகவேயன்றி படைக்கவில்லை (திருக்குர்ஆன் 51:57). மேலும் இறை திருப்தியைப் பெறுவதே மிகப் பெரும் வெற்றியாகும் (9:72) என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது.

இறைவணக்கம் என்பதைக் குறிக்கும் இபாதத் என்ற சொல் பரந்த பொருளைக் குறிப்பதாகும். அது தொழுகையை மட்டும் குறிப்பதில்லை. மாறாக, மனிதன் தனது ஒவ்வொரு செயலிலும் இறை நாட்டத்தை முன்னிறுத்துவதை இச்சொல் குறிப்பிடுகிறது. இந்த வகையில் மனிதன் இறைவனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளிலும் மனிதனுக்கு செலுத்த வேண்டிய உரிமைகளிலும் இறைதிருப்தியைக் கருத்தில் கொள்ளும் போது அந்த ஒவ்வொரு செயலும் இறைவணக்கம் ஆகி விடுகிறது. இஸ்லாம் மனித வாழ்வின் இந்த நோக்கத்தை அடைவதற்கான ஏற்ற வழிமுறைகளை மனிதனுக்குக் கற்றுத் தருகிறது. அதைப் போன்று இந்த நோக்கத்திற்கு எதிரான அனைத்து விஷயங்களிலிருந்தும் அவனைத் தடுக்கவும் செய்கிறது. பழக்க அடிமைத் -தனங்கள் இந்த இருவகை உரிமைகளையும் செலுத்த விடாது மனிதனைத் தடுப்பதால் தீய பழக்கங்களினால் ஏற்படும் தீமைகளைக் குறித்தும் அதிலிருந்து விடுபடும் வழிமுறை -களைக் குறித்தும் இஸ்லாம் போதிக்கின்றது.

## உடனடி இன்பமும் தாமதித்த மன நிறைவும்

நாம் எப்படி இன்பத்தை உணர்கிறோம் என்பதைத் தீர்மானிப்பதில் முக்கிய பங்கு வகிப்பது டோபமைன் (Dopamine) என்ற வேதிப்பொருளாகும். மூளையில் சுரந்து நரம்பு மண்டலத்தில் பயணிக்கும் இந்த வேதிப்பொருளே நமது அன்றாட செயல்களில் உடனடி மகிழ்வு உணர்வையும், ஆர்வத்தையும், உற்சாகத்தையும், உந்துதலையும் நம்மில் ஏற்றடுத்துகிறது. உதாரணமாக, சுவைமிக்க ஒரு பண்டத்தை அல்லது உணவைச் சாப்பிடும் போது நமக்கு ஏற்படும் இன்பம் உடனடி இன்பமாகும் (Instant gratification). இந்த உடனடி இன்பத்திற்கு காரணி டோபமைன் ஆகும். இந்த இன்பம் வைக்கப்பட்டிருப்பதன் நோக்கம் உயிர்கள் உணவைத் தேட வேண்டும் என்பதற்காகவேயாகும். ஏனெனில் உணவின்றி வாழ்வு நிலைபெற முடியாது. ஆனால் இதே வேதிப்பொருள் (டோபமைன்) கோகோயின், சிகரெட் புகைத்தல், சமூக ஊடகங்களில் முடிவில்லாமல் ஸ்க்ரோலிங் செய்தல், நொறுக்குத் தீனிகளை உண்பது போன்றவற்றிற்குப் பிறகும் மூளையில் வெளிப்படுகிறது. அப்போது நமது மனம் அதிகப்படியான டோபமைனுக்காக ஏங்க ஆரம்பிக்கிறது. இவ்வாறான மலிவான டோபமைன் வெளியீடுகளால் பழக்க அடிமைத்தனங்கள் தோன்றுவதுடன் நமது மூளையின் இன்பம் - வலி சமநிலை பாதிக்கப்படுகிறது. இதன் விளைவாக மன உளைச்சல், பதற்றம், எதிலும் ஆர்வமின்மை போன்றவற்றுடன் உடல் உபாதைகளும் தோன்றுகின்றன.

மனிதன் உழைத்து முயற்சித்து வழியில் பல தடைகளைத் தாண்டி பல கஷ்டங்களை மேற்கொண்டு ஒரு விஷயத்தில் வெற்றி பெறும்போது தோன்றும் இன்பம் அலாதியானது. ஒரு மாணவன் ஓராண்டு காலம் முயற்சித்து படித்து இறுதியில் வெற்றிபெறும் போது பெருமகிழ்ச்சி அடைகிறான். இந்த இன்பம் தாமதித்த மன நிறைவு எனப்படுகிறது (Delayed gratification). இந்த இன்பம் நீண்ட காலம் நிலைத்திருக்கிறது. இந்த இன்பத்திற்கான காரணி நமது உடலில் சுரக்கும் எண்டோர்ஃபின் (Endorphin) என்ற வேதிப்பொருளாகும். மனிதனது உழைப்பின் வெகுமதியாக இந்த இன்பம் வைக்கப்பட்டுள்ளது.

## இஸ்லாம் தாமதித்த மன நிறைவையே மகிழ்ச்சியாகக் கருதுகிறது:

இஸ்லாம் தாமதித்த மன நிறைவையே உண்மையான மகிழ்ச்சியாகக் கருதுகிறது. இவ்வுலகு நம்பிக்கை




கொண்டவர்களுக்கு சிறை போன்றதாகும். அவர்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட சுவர்க்க வாழ்வு மறுமையில் வழங்கப்படும். திருக்குர்ஆன் இவ்வுலக வாழ்வைக் குறிக்க பயன்படுத்தும் 'துன்யா' என்ற சொல்லின் சொற்பொருள் அகராதியின் அடிப்படையில் மிக அருகில் உள்ளது. எளிதில் கிடைக்கக் கூடியது என்பதாகும். அதைப் போன்று மறுமையைக் குறிக்கப் பயன்படும் 'ஆகிரத்' என்ற சொல் தொலைவில் இருப்பதையும் பின்னர் வர இருப்பதையும் குறிக்கிறது.

நம்பிக்கை கொண்டவர்கள் இவ்வுலகில் செய்திடும் நிலையான இறைவணக்கம் மற்றும் நற்செயல்களில் கூட முயற்சி மற்றும் கஷ்டங்களுடன் கூடிய தாமதித்த மன நிறைவே வைக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, உள்ளத்தில் மகிழ்ச்சியைத் தரும் ஈத் என்னும் பெருநாள் 30 நாட்கள் முயற்சித்து நோன்புகள் நோற்ற பின்னரே வைக்கப்பட்டுள்ளது. தாமதித்த மன நிறைவே உண்மையான மகிழ்ச்சி என்பதைக் கீழ்வரும் திருக்குர்ஆன் வசனங்கள் எடுத்துரைக்கின்றன.

அந்நாளில் சில முகங்கள் மிக்க மகிழ்ச்சியடைந்தவை -யாக இருக்கும். தங்களுடைய (சென்ற கால) கடினமான முயற்சியினால் மிகவும் திருப்தியடைந்திருப்பர் (88:9-10)

மனிதன் எதற்காக முயற்சி செய்கிறானோ அதுவே அவனுக்கு கிடைக்கிறது. (53:40)

நிச்சயமாக ஒவ்வொரு கஷ்டத்துடனும் சுகம் உண்டு. நிச்சயமாக ஒவ்வொரு கஷ்டத்துடனும் சுகம் உண்டு. (94:6-7)

மனிதனே! நீ நிச்சயமாக உனது இறைவனை நோக்கிக் கடினமாக உழைத்ததன் பின்னர் அவனைச் சந்திப்பவனாக இருக்கின்றாய். (84:7)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இரட்சிப்பு என்பது கிறிஸ்துவின் பாவமன்னிப்பை ஏற்றுக் கொள்வதனால் கிடைத்து விடுகிறது என்ற கிறித்தவக் கொள்கையைக் குறித்து விமர்சிக்கும் போது இவ்வாறு கூறினார்கள்:

"உண்மை என்னவெனில் எந்த முயற்சியும் போராட்டமும் இல்லாத வழியைத் தேர்ந்தெடுப்பது மனித இயல்பாகும். எவ்வாறாயினும் உண்மையான தூய்மைக்கு அதிக வலி மற்றும் முயற்சி தேவைப்படுகிறது. மேலும் மனிதன் மரணக் கோப்பையைக் குடிக்கும் வரை தூய்மையான வாழ்க்கையை அடைய முடியாது. எனவே கடினமான மற்றும் குறுகிய பாதையைத் தவிர்ப்பது மற்றும் எளிதான மற்றும் எளிமையான வழிகளைத் தேடுவது மனித குலத்தின் விருப்பமாக இருப்பதைப் போலவே, இந்த மக்களும் ஆன்மாவின் மீது எந்தக் கடினத்தையும் சுமத்தாத வெறும் சொற்களைக் கொண்டு வாக்குமூலம் செய்யப் -படுகின்ற சிலுவைக் கொள்கையை ஏற்றுள்ளனர்." (பராஹீனே அஹ்மதிய்யா பாகம் 5, பக்கம் 53 - ஆங்கில மொழிபெயர்ப்பு)

## போதைப் பொருட்களைப் பற்றிய இஸ்லாத்தின் போதனைகள்:

அவர்கள் உம்மிடம் மதுவைப் பற்றியும் சூதாட்டத்தைப் பற்றியும் வினவுகின்றனர். இவ்விரண்டிலும் மக்களுக்குப் பெரும் பாவமும் சில பயன்களும் உள்ளன. இவற்றின் பாவம் இவற்றின் பயனை விட மிகவும் பெரியதாகும் என்று நீர் கூறுவீராக. (2:220)

நம்பிக்கை கொண்டவர்களே! போதைப்பொருட்கள், சூதாட்டம், சிலை(வழிபாடு)கள், குறி பார்க்கும் அம்புகள் ஆகியன அருவருக்கத்தக்கதும் ஷைத்தானின் செயலுமே ஆகும். எனவே நீங்கள் வெற்றி பெறும் பொருட்டு, அவற்றிலிருந்து (முற்றிலும்) விலகிக் கொள்ளுங்கள். (5:91)

போதைப் பொருட்கள், சூதாட்டம் ஆகியவற்றால் உங்களுக்கிடையே பகையையும் வெறுப்பையும் உருவாக்கி அல்லாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும் தொழுகையில் இருந்தும் உங்களைத் தடுத்து விடவே ஷைத்தான் விரும்புகின்றான். எனவே நீங்கள் இவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ளமாட்டீர்களா? (5:92)

1. இந்த மூன்று வசனங்களிலும் பொருள் சார்ந்த பழக்க அடிமைத்தனத்தையும் நடத்தை சார்ந்த பழக்க அடிமைத்தனத்தையும் குறித்து ஒருங்கே கூறப்பட்டுள்ளது.

2. மது மற்றும் சூதாட்டத்தினால் சில நன்மைகள் உள்ளன. ஆனால் அவற்றின் தீங்கு அவை தரும் நன்மையை விடப் பல மடங்காகும்.

3. பழக்க அடிமைத்தனத்தை ஏற்படுத்தும் ஒவ்வொன் -றிலிருந்தும் நாம் முற்றிலும் தவிர்ந்திருக்க வேண்டும். போதையை ஏற்படுத்தும் பொருட்களின் சிறிய அளவு பயன்பாடும் தவறானதேயாகும்.

4. இவை மக்களிடையே பகையையும் வெறுப்பையும் உருவாக்குகின்றன.

5. இவை அலல்ாஹ்வை நினைவு கூர்வதிலிருந்தும் தொழுகையிலிருந்தும் நம்மைத் தடுக்கின்றன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அதிக அளவில் எடுத்துக் கொள்ளும் போது போதையை உருவாக்கும் எந்த ஒரு பொருளின் குறைந்த அளவு பயன்பாடும் தடுக்கப்பட்டுள்ளது." (இப்னு மாஜா 3394, நூல் 30, ஹதீஸ் 24)

Scientific Reports வெளியிட்ட புதிய ஆய்வு, மிகச்சிறிய அளவு ஆல்கஹால் கூட மூளையில் எவ்வாறு தீங்கு விளைவிக்கும் என்பதை வெளிப்படுத்தியது. 11,651 பங்கேற்பாளர்களை உள்ளடக்கிய இந்த ஆய்வு இங்கிலாந்தில் நடந்தது. "தினமும் அல்லது வாரத்தின் பெரும்பாலான நாட்களில் மது அருந்துபவர்கள், மது அருந்தாதவர்களுடன் ஒப்பிடும்போது, 0.4 ஆண்டுகள் அல்லது 5 மாதங்கள் கூடுதல் மூளை முதுமை அடைந்துள்ளனர் என்று ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இதன் பொருள், தொடர்ந்து

குடிப்பதால், மூளை முதுமை அதிகரிக்க வழி வகுத்தது'' என்று ஆராய்ச்சியாளர்கள் விளக்கினர். ஒவ்வொரு கிராம் ஆல்கஹாலுக்கும், மூளையின் வயது (தோராயமாக) ஒரு வாரம் ஆகும் என்று ஆய்வு முடிவு செய்தது! இதைத் தடுப்பதற்கான (வெளிப்படையான) வழி, மதுவை முற்றிலுமாகத் தவிர்ப்பது என்று ஆராய்ச்சியாளர்கள் விளக்கினர். (*News-medical.net*, 2 பிப்ரவரி 2020 - அல்ஹகம் 7 பிப்ரவரி 2020)

இந்த அறிவுரை 1400 ஆண்டுகளுக்கு முன்பே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் போதித்த ஒன்றாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள்: 'இஞ்சீலைப் போன்று, போதை ஏற்படாத அளவுக்கு மதுவை அருந்திக் கொள்ளலாம் என்று திருக்குர்ஆன் அதனைப் பின்பற்றுபவர்களுக்கு அனுமதி வழங்கவில்லை. மாறாக, மதுவின் நுகர்வை முற்றிலுமாக அது தடை செய்கிறது. இல்லையெனில், நீங்கள் இறைவனிடமும் அவனுடன் உரையாடுவதற்கும் இட்டுச் செல்லும் பாதையில் இருந்து தொலைந்து போவீர்கள். மேலும் அத்தகையவர்களை அசுத்தங்களை விட்டும் இறைவன் அவர்களை தூய்மைப் -படுத்தவும் மாட்டான். இது போன்ற விஷயங்கள் ஷைத்தானின் கண்டுபிடிப்பு என்றும், அவற்றிலிருந்து நீங்கள் உங்களைக் காத்துக் கொள்ள வேண்டும் என்றும் திருக்குர்ஆன் கூறுகிறது.' (கிஷ்தி நூஹ் - நூஹின் கப்பல் பக்கம் 53)

'மதுபானம் அருந்தும் ஒவ்வோர் எஜமானனின் கீழ் பணியாற்றும் ஊழியர்களும் அவருடன் மதுபானம் அருந்துவதில் பங்கு கொண்டவர்களாயின் அவர்களின் பாவமும் அந்த எஜமானரின் பிடரியின் மீதே விழும். அறிவுடையவர்களே! இவ்வுலகமானது நிரந்தரமான ஓர் இடம் அல்ல. ஆகவே நீங்கள் சுதாகரித்துக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லா விதமான அநீதிகளையும் விட்டு விடுங்கள். போதையை விளைவிக்கக் கூடிய ஒவ்வொரு பொருளையும் விட்டொழித்து விடுங்கள். மனிதனை நாசமாக்கக் கூடியது மது மாத்திரமல்ல. அபின், கஞ்சா, சரஸ், பங்கு, கள் முதலான போதைப் பொருட்களையும் நீங்கள் விட்டு விடுங்கள். அவை மூளையைக் கெடுத்து விடுவது மட்டுமல்லாமல் இறுதியில் மனிதனையே அழித்து விடுகிறது. ஆகவே இவற்றிலிருந்து நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். நீங்கள் இப்பொருட்களை ஏன் உபயோகித்து வருகிறீர்கள் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை. இவற்றின் தீங்கினால் உங்களைப் போன்றவர்கள் போதைப் பொருட்களுக்கு அடிமையாகி ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கில் இவ்வுலகத்தை விட்டும் பிரிந்து கொண்டிருக்கிறார்கள். இதுபோக இத்தகையவர் -களுக்கு மறுமையின் ஆக்கினை வேறு இருக்கிறது.' (கிஷ்தி நூஹ் - நூஹின் கப்பல் பக்கம் 119)

ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகிறார்கள்:

'மக்களுக்கு தீங்கு விளைவிப்பதால் போதைப் பொருட்கள் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவரை இறையச்சத்திலிருந்து விலக்கும், தீங்கு விளைவிக்கும் அனைத்தும் இஸ்லாத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில், மக்கள் ஏற்கனவே மது அருந்துபவர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் போதையில் இருந்ததால் அவர்களால் தொழுகையை முறையாகப் பேண முடியவில்லை. எனவே மது தடை செய்யப்பட்டது. கஞ்சா போன்ற மற்ற போதைப் பொருட்களைப் போன்று சிகரெட் ஏன் தடை செய்யப்படவில்லை என்று சிலர் கேட்கின்றார்கள். எனினும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் இமாம் மஹ்தியாகிய ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) அவர்கள் சிகரெட் தடை செய்யப்படவில்லை என்றாலும், நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அவை இருந்திருந்தால் அவை தடை செய்யப்பட்டிருக்கும். இப்போது நாம் சிகரெட்டைக் கொண்டு அதன் தீய விளைவுகளை மக்கள் உணர்ந்திருப்பதைக் காண்கிறோம். எனவே சிகரெட் பாக்கெட்டுகளில் தெளிவான எச்சரிக்கை லேபிள்கள் உள்ளன. புற்றுநோய், நுரையீரல் நோய்கள் மற்றும் சிகரெட் புகைப்பதால் ஏற்படும் தீங்கான விளைவுகள் அனைத்தும் அறியப்பட்டுள்ளன.'




'எவ்வாறாயினும், போதைப் பொருள்கள் பயன்பாடு தவறானது என்பது குறித்த இஸ்லாத்தின் கட்டளை தெளிவாக உள்ளது. உதாரணமாக, மது தயாரிப்பவர், மது அருந்துபவர், மதுவை வழங்குபவர், மதுவை வாங்குபவர், விற்பவர், விநியோகிப்பவர் ஆகியோரை அல்லாஹ் சபித்து விட்டான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.' (Review of Religions - 30 ஆகஸ்ட் 2018)


### சமூக ஊடகங்களின் பயன்பாடு குறித்து ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்களின் வழிகாட்டல்கள்

இணையதளத்திலும் சமூக ஊடகங்களிலும் நீண்ட நேரம் செலவு செய்வதும் நடத்தை சார்ந்த பழக்க அடிமைத்தனமாக மாறி விட்டது. இது டிஜிட்டல் அடிமைத் -தனம் (Digital Addiction) என்றும் அழைக்கப்படுகிறது. UK போன்ற நாடுகளில் இந்த வகை அடிமைத்தனத்தை குணப்படுத்துவதற்காக கிளினிக்குகளும் செயல்படுகின்றன. மேலும் WHO இணையதள விளையாட்டுகளினால் ஏற்படும் அடிமைத்தனத்தை (Gaming Disorder) ஓர் நோயாகவும் அறிவித்துள்ளது.

ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தொழில்நுட்ப முன்னேற்றங்களின் காரணமாக குறிப்பாக இளைஞர்களும் சிறுவர்களும் பாதிக்கப்படுவதைக் குறித்து பல தருணங்களில் போதனைகளையும் எச்சரிக்கைகளையும் அளித்துள்ளார்கள். சமூக ஊடகங்களின் பயன்பாடு மற்றும் குழந்தைகளை இணையதள

விளையாட்டிலிருந்து எவ்வாறு பாதுகாக்க முடியும் என்ற சகோதரர் ஒருவரின் கேள்விக்குப் பதில் தரும் போது ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:

“இப்போது விஞ்ஞானிகள் மற்றும் மருத்துவர்கள் கூட இந்த விஷயங்கள் அவர்களின் கண்பார்வை மற்றும் சிந்தனையைப் பாதிக்கிறது என்று கூறுகிறார்கள். அதனால்தான் குழந்தைகள் 24 மணிநேரத்திற்குள் ஒரு மணி நேரத்திற்கு மேல் இணையம், வீடியோ கேம்கள் மற்றும் டிவி பார்ப்பதை அனுமதிக்கக் கூடாது... நேரத்தை மட்டுமல்ல, பணத்தையும் வீணடிக்கும் விளையாட்டுகள் உள்ளன. அவர்கள் விளையாட்டை வாங்குவதற்குப் பணம் செலுத்துகிறார்கள் மற்றும் ஒரு நபர் எவ்வாறு ஏதாவது ஒன்றிற்கு அடிமையாக இருப்பதைப் போலவே, குழந்தைகளும் கேமிங்கிற்கு அடிமையாகிறார்கள். அது இல்லாமல் அவர்களால் இருக்க முடியாது. இந்த



விளையாட்டுகளை விளையாடும்போது ஒழுக்கக்கேடான மற்றும் அநாகரீகமான விளம்பரங்களும் திரையில் தோன்றுகின்றன. விளையாடும்போது தோன்றும் இந்த விளம்பரங்களின் விளைவாக அவர்களின் மனம் சிறு வயதிலிருந்தே மாசுபடுகிறது. பிறகு பெரியவர்களாகும்போது தவறான பாதையில் செல்கிறார்கள். எனவே பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் இணையத்தில் என்ன விளையாட்டு விளையாடுகிறார்கள் அல்லது அவர்கள் டிவி அல்லது இணையத்தில் என்ன பார்க்கிறார்கள் என்பதைக் கவனிக்க வேண்டும். ஒதுக்கப்பட்ட நேரத்திற்கு வெளியே அவர்கள் பார்க்கவில்லை என்பதை உறுதிப்படுத்த வேண்டும். அவர்களைக் கண்காணிக்க வேண்டும். அவர்களின் பார்வைக் குறைவும் மற்றும் அவர்களின் மனம் பாதிக்கப்படும் என்பதை அவர்களுக்கு விளக்க வேண்டும். எனவே அவர்களின் மூளை வளர்ச்சிக்கு சிறந்த புத்தகங்களைப் படிப்பது நல்லது என்பதை அவர்களிடம் கூறுங்கள். இது மட்டுமின்றி அவர்களுக்குப் பல்வேறு செயல்பாடுகளை ஏற்பாடு செய்ய வேண்டும். அவர்களிடம் பேசுங்கள். அவர்களுடன் உட்கார்ந்து, அவர்களுடன் கலந்துரையாடுங்கள். பின்னரும் அவர்கள் அடம்பிடித்தால் இணையத்திலோ அல்லது டிவி-யிலோ அவர்களைக் கல்வியிலும் ஆன்மிகத்திலும் மேம்படுத்துவதோடு அவர்கள் ஞானத்தைப் பெறவும் உதவிடும் நிகழ்ச்சிகளைக் காட்டுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

எனவே இவை அனைத்தையும் நீங்கள் செய்ய வேண்டும். இருப்பினும், பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் என்ன பார்க்கிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கவனிக்க வேண்டியது மிகவும் முக்கியமாகும். பெற்றோர்களே நன்றாகப் படிக்காதவர்களாகவும், இன்னும் படித்துக் கொண்டிருக்கும் பிள்ளைகள் விளையாட்டில் செலவழித்தும், பெற்றோர்கள் எந்தக் கவலையும் காட்டாமல், தங்கள் சொந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தினால், அவர்கள் தங்கள் குழந்தைகளை அழித்து விடுவார்கள். எனவே இந்த விஷயத்தில் நீங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். இதற்காக ஒருவர் நிறைய முயற்சிகள் செய்ய வேண்டும். ஆயினும் கூட, ஒருவர் அவர்களைக் கண்காணிக்க வேண்டும். சில சமயங்களில் குழந்தைகளுக்குக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். ஆனால் அவர்களை உடல் ரீதியாக தண்டிப்பதன் மூலம் அல்ல. மாறாக அவர்களுக்கு அன்பான முறையில் விளக்கி, அவர்கள் ஒரு குறிப்பிட்ட வகையான நிகழ்ச்சிகளை மட்டுமே பார்க்க முடியும் என்று அவர்களிடம் கூறுங்கள். அதுவும் குறிப்பிட்ட நேரத்திற்கு மட்டுமேயாகும். அநாகரீகமான விளம்பரங்கள் தோன்றும் நிகழ்ச்சிகள் தடுக்கப்பட (block செய்யப்பட) வேண்டும். எனவே அவை உங்கள் இணையத்தில் தோன்றாது. ஆனால் விளையாட்டுகளுக்கு கூட ஒருகுறிப்பிட்ட நேரம் இருக்க வேண்டும். வெளியில் சென்று கால்பந்து அல்லது கிரிக்கெட் விளையாடச் சொல்லுங்கள். ஆனால் டிவி முன் அமர்ந்து அவர்களின் மனதைக் கெடுக்க வேண்டாம் என்றும், ஒரு மணி நேரம் மட்டுமே டிவி பார்க்க அனுமதி உண்டு என்றும் சொல்லுங்கள். இருப்பினும், ஒருவர் அதிக கண்டிப்புடன் இருக்கக் கூடாது. ஏனென்றால் இன்றைய சமூகத்தில், அதிகப்படியான கண்டிப்பு காட்டப்பட்டால், அது அவர்களை வழிதவறச் செய்யும். அதனால் அவர்களுக்கு அன்பான முறையில் விளக்கி அவர்களுடன் நட்புறவை ஏற்படுத்துங்கள். இதனால் குழந்தைகள் தங்கள் பெற்றோரை தங்கள் நண்பர்களாகக் கருதுவார்கள். இந்த விஷயத்தில் பெற்றோர்கள் கடுமையாக உழைக்க வேண்டும்.” (This week with Huzoor 18 June 2021)

மேலும் ஹஸ்ரத் கலீ∴பத்துல் மஸீஹ் (அய்யத -ஹுல்லாஹ்...) அவர்கள் கூறுகின்றார்கள்:

“இன்றைய சமூகம் ஒழுக்க ரீதியில் சிதைந்து ஆன்மிக ரீதியில் சீர்குலைந்துள்ளது. ஏனெனில் பிரதான ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் தீங்கு விளைவிக்கும் விளைவுகள் மார்க்கம் மற்றும் இறைநம்பிக்கையிலிருந்து மக்களைத் தொடர்ந்து தூரப்படுத்துகின்றன. பள்ளிகளில் கூட, மிகச் சிறிய குழந்தைகளுக்கு தகாத மற்றும் ஒழுக்கக்கேடான விஷயங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவர்களால் அவற்றைப் புரிந்து கொள்ளவும் முடியாது. இதன் விளைவாக, மிகச் சிறிய வயதிலிருந்தே குழந்தைகள் தங்கள் பள்ளிகளாலும், பரந்த சமுதாயத்தாலும் மார்க்கத்திற்குப் புறம்பான சிந்தனைக்குத் தள்ளப்படுகிறார்கள் மற்றும் மார்க்க விதிகள் மற்றும் போதனைகளிலிருந்து விலகி விடுகிறார்கள். இத்தகைய சூழ்நிலைகளில், தங்கள் குழந்தைகளின் மார்க்கப் பயிற்சியை உறுதி செய்ய வேண்டிய பொறுப்பு பெற்றோருக்கு மிகவும் அதிகமாக உள்ளது. இந்த நாட்களில் குழந்தைகளின் கார்ட்டூன்கள் அல்லது கணினி

(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)

# ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

தமிழாக்கம்: மவ்லவி O.M. முஸ்ஸம்மில் அஹ்மத் H.A.




بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ

ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள் இறுதி காலத்தில் இஸ்லாத்தைப் புதுப்பிப்பதற்காகவும், அதை மேலோங்கச் செய்வதற்காகவும், உம்மத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தோன்றுவார்கள் என்ற நற்செய்தி வழங்கிய அதே நேரத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அடிப்படையான பணியாக,

فَيَكْسِرُ الصَّلِيْبَ وَيَقْتُلُ الْخِنْزِيْرَ (∴பயக்ஸிருஸ் ஸலீப வ யக்துலுல் கின்ஸீர்) என்றும் கூறினார்கள். (புகாரி. கிதாபுல் அன்பியா. பாபு நுஸூலி ஈஸப்னி மர்யம்) அதாவது, வாக்களிக்கப்பட்ட மஸீஹ் சிலுவையை முறிப்பார் பன்றியைக் கொல்வார். (புகாரி தமிழ்ப் பதிப்பு ஹதீஸ் எண் 3448 பாகம் 4 பக்கம் 145 காண்க மொழிபெயர்ப்பாளர்).

சிலுவையை முறித்தல் என்பதன் பொருள், வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கிறித்தவத்தின் பொய்யான கொள்கைகளின் அழுத்தத்தை உடைத்து அவற்றிற்குப் பகரமாக இஸ்லாத்தின் உண்மையான கொள்கைகளை மேலோங்கச் செய்வார். மேலும் பன்றியின் பண்புகளைக் கொண்ட மக்களிடமிருந்து எல்லா விதமான அசுத்தங்களையும் நீக்கி, அவர்களைப் பரிசுத்தமானவர்களாக-வும், தூய்மையானவர்களாகவும், தூய்மையாக்கப்பட்டவர்-களாகவும் ஆக்குவார் என்பதாகும். இந்த நபிமொழியில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தோற்றத்தைப் பற்றிய நற்செய்தி வழங்கப்பட்டிருந்த அதே நேரத்தில், இறுதி காலத்தில் கிறித்தவம் முழு பூமியையும் சூழ்ந்து கொள்ளும் அளவுக்கு அதற்கு மிகவும் வளர்ச்சி இருக்கும் என்ற தெளிவான சைகையும் அதில் மறைந்திருக்கிறது.

அந்த நேரத்தில் முஸ்லிம்களுக்கு இருந்த நிலைமையினால் இஸ்லாத்தைப் பற்றிய வேதனை உள்ளத்தில் இருக்கும் ஒவ்வொரு முஸ்லிமும் அமைதி இழந்தவராக இருந்தார். இந்திய துணைக் கண்டத்தில் ஆரியர்களும், கிறித்தவப் பாதிரிமார்களும், அவர்களின் கொள்கை பரப்புநர்களும் இஸ்லாத்தின் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை செய்யத் தொடங்கி இருந்தனர். எந்த அளவுக்குக் கடுமையான தாக்குதல்களை செய்து வந்தனர் என்றால், முஸ்லிம் ஆலிம்களும் அந்த நேரத்தில் அடங்கி ஒடுங்கி இருந்தனர். அந்தத் தாக்குதல்களுக்கு (முஸ்லிம் ஆலிம்களாகிய) அவர்களிடம் எந்த விடையும் இருக்க-வில்லை. விடையளிக்க முடியாமல் வாயடைத்துப் போன காரணத்தால் சில முஸ்லிம்கள் இஸ்லாத்தை விட்டு விட்டு கிறித்தவத்தின் தேவாலயங்களுக்குச் சென்று கொண்டிருந்-தனர். மேலும் சிலர் இஸ்லாத்தை விட்டும் முற்றிலும் விலகிக் கொண்டனர். அந்த நேரத்தில் கிறித்தவம் மற்றும் பிற மதங்களின் தாக்குதல்களுக்குப் போட்டியாக ஒருவர் இருந்தார் என்றால், அல்லாஹ்வின் வீரர் ஒருவர் மட்டுமே இருந்தார். அதாவது, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள். அவர்கள் அந்த மதங்களுடன் தன்னந்தனியாக நாலாபுறமிருந்தும் போரிட்டார்கள்.

அப்துல்லாஹ் ஜேம்ஸ் என்ற ஒரு பாதிரி இஸ்லாத்தைப் பற்றிய மூன்று கேள்விகளைக் கேட்டு அவற்றிற்கான விடையைக் கேட்டவாறு அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம் என்ற அமைப்புக்கு எழுதினார். (அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம் அமைப்பைச் சேர்ந்த) அவர்கள் இந்தக் கேள்வியை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கும், ஹஸ்ரத் மவ்லானா நூருத்தீன் சாஹிப் அவர்களுக்கும் அனுப்பி இருந்தனர். அந்த விடைகளை அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம் அமைப்பு ஹிஜ்ரி 1309-ல் ‘ஒரு கிறித்தவரின் மூன்று வினாக்களும் அவற்றிற்கான விடைகளும்’ என்ற பெயரில் வெளியிட்டது.

(இந்த நூல் பின்னர் تصديق النبى (தஸ்தீகுன் நபி - நபியை உண்மைப்படுத்துதல்) என்ற பெயரில் காதியானிலிருந்து வெளியிடப்பட்டது. அதில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விடைகள் மட்டும் வெளியிடப்பட்டன).

அஞ்சுமன் இஷாஅத்தே இஸ்லாம் என்ற அமைப்பு அதன் முன்னுரையில் இவ்வாறு எழுதியிருக்கிறது:

"இஸ்லாம் மார்க்கத்தின் தமது உயர்தரமான மார்க்க சிந்தனை, திறமை, சிறப்புத்தன்மை, அழகிய நல்லொழுக்கம் ஆகிய மேன்மைகளின் காரணமாக, இன்றைய காலத்தின் நாகரீகமான அறிவு கொண்டவராக வாதிடுகின்றவர் சமுதாயங்களின் ஆசிரியராக இருந்த அத்தகைய கலப்பற்ற தன்மையைப் பின்பற்றும் அடியார்களாக இருந்தவர்களின் தலைமுறைகளே இன்று முற்றிலும் அறிவற்றவர்களாகவும், முற்றிலும் திறமையற்றவர்களாகவும், உண்மையான மார்க்கத்தின் தூய அடிப்படைக் கொள்கைகளிலிருந்து வெகு தொலைவிலும் இருக்கின்றனர். அவர்களின் அறியாமையின் விளைவு, தனது மார்க்கத்தின் உண்மைக்கு எந்த அறிவுப்பூர்வமான சான்றும், எழுத்துப்பூர்வமான சான்றும் இல்லாத சிலை வணங்கும் சமுதாயங்கள் பகிரங்கமாக இஸ்லாத்தை மறுப்பதற்காக நிற்கின்றன. மேலும் நமக்கு நமது அறிவின்மை, திறமையின்மை ஆகியவற்றால் அவர்களுக்கு விடையளிக்க தைரியமில்லை."



ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மிகவும் விளக்கமாகவும், விரிவாகவும் இந்தக் வினாக்களுக்கான விடைகளைக் கொடுத்திருக்கிறார்கள். முன்மாதிரிக்காக சில மேற்கோள்கள் எடுத்து வைக்கப்படுகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

"இப்போது உண்மையைத் தேடுபவர் -களே! உண்மையின் அடையாளங்களுக்காக பசித்திருப்பவர்களே! தாகித்திருப்பவர்களே!! நீதியுடன் பாருங்கள். கொஞ்சம் தூய பார்வையுடன் சிந்தித்துப் பாருங்கள். எந்த அடையாளங்களை இறைவன் திருக்குர்ஆனில் குறிப்பிட்டிருக்கிறானோ, அவை எவ்வளவு உயர்ந்த அந்தஸ்தைக் கொண்ட அடையாளங் -களாக இருக்கின்றன! அவை ஒவ்வொரு காலத்திலும் பார்க்கப்பட்டும், உணரப்பட்டும் வருகின்றவையாக இருக்கின்றன. முன்னர் இருந்த நபிமார்களுடைய அற்புதங்களின் பெயரும், அடையாளமும் கூட இப்போது எஞ்சியிருக்கவில்லை வெறும் கதைகள்தான் இருக்கின்றன. அவற்றின் அசல் நிலை எந்த அளவுக்கு சரியாக இருக்கின்றன என்பதை இறைவனே அறிவான். குறிப்பாக, சுவிசேஷங்களில் எழுதப்பட்டுள்ள இயேசுவின் அற்புதங்கள் என்பவை கதைகள், கதைத்தொகுப்புகள் என்ற வடிவில் இருந்த போதிலும், அவற்றில் ஏராளமான மிகைப்படுத்துதல் இருந்தாலும் அவற்றில் எப்படிப்பட்ட சந்தேகங்களும், ஐயங்களும் ஏற்படுகின்றனவென்றால், (சந்தேகங்களாகிய) அவற்றிலிருந்து (சுவிஷேசங்களாகிய) அவற்றை முற்றிலும் தூய்மையாக்கிக் காட்டுவது மிகவும் கடினமாகும்."

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மேலும் இவ்வாறு கூறுகின்றார்கள்:

"சுருக்கமாக, அமெரிக்காவும், ஐரோப்பாவும் இன்றைய காலத்தில் ஒரு கொந்தளிப்பின் நிலையில் இருக்கின்றது. உண்மைக்கு மாற்றமாக இருக்கும் புதிய ஏற்பாட்டின் கொள்கைகள் அவர்களைப் பெரும் பதற்றத்திற்குள்ளாக்கி விட்டன. எதுவரையென்றால், சிலர் வெளிப்படுத்திய கருத்து என்னவெனில், மஸீஹ் அல்லது இயேசு என்ற பெயரில் எந்தவொரு நபரும் வெளிப்படையில் பிறக்கவில்லை. மாறாக, அதன் கருத்து சூரியன் என்பதாகும். மேலும் பன்னிரெண்டு சீடர்கள் என்பதன் கருத்து, பன்னிரெண்டு நட்சத்திரங்கள் என்பதாகும். பிறகு விசுவாசம் கொண்டவர்களுக்குரியவை என்று எந்த அடையாளங்களை இயேசு குறிப்பிட்டிருந்தாரோ, அவற்றில் ஒன்று கூட இந்த (கிறித்தவ) மக்களிடத்தில் காணப்படவில்லை. இதிலிருந்தும் கிறித்தவ மதத்தின் உண்மை நிலை இன்னும் அதிகமாக தெளிவாகிறது.

இயேசு கூறியது என்னவெனில், நீங்கள் என்னைப் பின்பற்றினால் எல்லாவிதமான அருள்களிலும், அங்கீகாரம் பெறுவதிலும் எனது உருவமாகவே ஆகி விடுவீர்கள் அற்புதங்கள் மற்றும் அங்கீகாரம் பெறுவதின் அடையாளம் உங்களுக்குக் வழங்கப்படும் நீங்கள் பலவிதமான அடையாளங்களைக் காட்ட முடியும் மேலும் நீங்கள் விரும்புவதே உங்களுக்கு நடக்கும். மேலும் எந்த விஷயமும் உங்களுக்கு சாத்தியமற்றதாக இருக்காது என்பதுதான் நீங்கள் விசுவாசம் கொண்டவர்கள் (நம்பிக்கை கொண்டவர்கள்) என்பதற்கான அடையாளமாகும் என்று இயேசு கூறினார். ஆனால் (தற்போது) கிறித்தவர்களின் கையில் இந்த அருள்களில் எதுவும் இல்லை. தனது சிறப்பான அடியார்களின் துஆக்களை ஒப்புக் கொள்கின்றவனும், அவர்களுக்கு முன்னால் பரிவு, கருணை ஆகியவற்றுடன் விடையளிக்கின்றவனும், அவர்களுக்காக வியத்தகு வேலைகளை செய்து காட்டுகின்றவனும் ஆகிய அந்த இறைவனைப் பற்றி ஒன்றும் அவர்கள் அறியாதவர்களாக இருக்கின்றனர்."

"(இறைவனால்) நேசிக்கப்படுபவராக இருப்பது, ஒப்புக் கொள்ளப்படுவது, உண்மையான இறைநேசம் ஆகியவற்றின் அந்தஸ்தைப் பற்றிய அடையாளங்களை ஓரளவுக்கு சுருக்கமாகக் குறிப்பிட்டு விட்டேன் என்பதை இப்போது தெரிந்து கொள்ள வேண்டும். இது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றாமல் ஒருபோதும் கிடைக்க முடியாது. உண்மையாக பின்பற்றுபவருக்கு எதிராக ஒரு கிறித்தவரோ அல்லது ஆரியரோ அல்லது யூதரோ துஆ ஒப்புக் கொள்ளப்படுவதன் அடையாளங்களையும், ஒளிகளையும் காட்ட விரும்பினால் அது அவருக்கு

ஒருபோதும் சாத்தியமாக இருக்காது. மேலும் சோதித்துப் பார்ப்பதற்கான மிகவும் தெளிவான வழி என்னவென்றால், உண்மையான முஸ்லிமாகவும், உண்மையாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுபவ -ராகவும் இருக்கும் ஒரு நல்ல முஸ்லிமுக்குப் போட்டியாக இன்னொரு கிறித்தவர் போன்றவர் வாதம் செய்பவராக நின்று, (முஸ்லிமாகிய) அவரிடம், எந்த அளவுக்கு உமக்கு வானத்திலிருந்து ஏதாவது அடையாளம் வெளிப்படும் என்றோ அல்லது எந்த அளவுக்கு மறைவான இரகசியங்கள் உமக்கு வெளிப்படுமோ அல்லது துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதன் மூலமாக எந்த அளவுக்கு உமக்கு உதவி செய்யப்படும் என்றோ அல்லது எந்த அளவுக்கு உமது மதிப்பையும், கண்ணியத்தையும் வெளிப்படுத்துவதற்காக (இறைவனிடம் இருந்து) பேராற்றலில் முன்மாதிரி வெளிப்படுத்தப்படும் என்றோ அல்லது முன்னறிவிப்பாக சிறப்பான அருட்கொடைகளைப் பற்றி உமக்கு வாக்குறுதி வழங்கப்படும் என்றோ அல்லது உமக்கு துன்பம் கொடுக்கின்ற ஓர் எதிரிக்கு ஏதாவது எச்சரிக்கை இறங்குவது பற்றிய செய்தி கொடுக்கப்படும் என்றோ இந்த எல்லா விஷயங்களிலும் எது உம்மிடம் வெளிப்பட்டாலும், எதை நீங்கள் காட்டினாலும் நானும் காட்டுவேன் என்றோ (அந்தக் கிறித்தவர்) கூற வேண்டும். அப்படிப்பட்ட வாதம் செய்வது எந்த எதிரியாலும் ஒருபோதும் முடியாது. (எதிரிகளாகிய அவர்கள்) ஒருபோதும் போட்டிக்கு வர மாட்டார்கள். ஏனெனில் நாம் முன்னரும் ஓரளவுக்கு எழுதியிருப்பதைப் போன்று, அவர்கள் பெரும் பொய்யர்களாக இருக்கின்றனர் என்றும், நேர்வழி பெற்றவர் -களுக்கு உதவியாளனாகவும், உண்மையாளர்களுக்கு நண்ப -னாகவும் இருக்கின்ற அந்த உண்மையான இறைவனுடன் தமக்கு எந்தத் தொடர்பும் இல்லை என்றும் அவர்களின் உள்ளங்கள் சாட்சி பகர்ந்து கொண்டிருக்கின்றன.

وَهٰذَا آخِرُ كَلَامِنَا وَالْحَمْدُ لِلّٰهِ أَوَّلًا وَّآخِرًا وَّظَاهِرًا وَّبَاطِنًا
هُوَ مَوْلَانَا نِعْمَ الْمَوْلٰى وَنِعْمَ الْوَكِيْلُ

(வஹாஸா வஆகிரு கலாமுனா வல்ஹம்து லில்லாஹி அவ்வலன்வ் வஆகிரன்வ் வழாஹிரன்வ் வபாதினன். ஹுவ மவ்லானா நி.்.மல் மவ்லா வநி.்.மல் வகீல்) பொருள்: இதுவே நமது இறுதி கூற்றாகும். மேலும் முதலிலும், இறுதியிலும், வெளிப்படையாகவும், உட்புறமாகவும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும். அவன் நமது அழகிய எஜமானன் ஆவான் அழகிய பரிபாலிப்பவனாவன். (வெளியீட்டாளர்)

(தொடரும்...)

---

*(21-ஆம் பக்கத்தின் தொடர்ச்சி ...)*

விளையாட்டுகளில் கூட முற்றிலும் பொருத்தமற்ற மற்றும் குழந்தைகளின் அப்பாவித்தனத்தை அழித்து விடுகின்ற கதைகள் அல்லது கதாபாத்திரங்கள் உள்ளன. குழந்தைகள் தங்கள் கார்ட்டூன்களைப் பார்ப்பதில் மிகவும் கவனமாகவும் விழிப்புடனும் இருக்க வேண்டும் மற்றும் குழந்தைகள் கார்ட்டூன்களைப் பார்க்கும்போது பெற்றோர்கள் கண்டிப்பாக கண்காணிக்க வேண்டும்.



இத்தகைய மறைப்பற்ற நிலையின் நீண்ட கால விளைவுகள் மிகவும் ஆபத்தானவை மற்றும் நமது வருங்கால சந்ததியினரை மார்க்கத்திலிருந்தும், ஒழுக்கத்தில் இருந்தும் எளிதாக அகற்றி விடும். எனவே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகள் எத்தகைய தாக்கங் -களுக்கு ஆளாகிறார்கள் என்பதை உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும். வெளிப்புற தாக்கங்களை எதிர்ப்பதற்கு, அஹ்மதி பெற்றோர் -கள் தங்கள் வீடுகளுக்குள் முற்றிலும் இஸ்லாமிய சூழ்நிலை -யை உருவாக்க வேண்டும். அங்கு அல்லாஹ்வின் கட்டளைகள் செயல்படுத்தப்பட வேண்டும். மேலும் சிறந்த ஒழுக்கங்கள் வெளிப்பட வேண்டும். குழந்தைகள் புத்திசாலிகள் மற்றும் மிகவும் கவனிக்கக் கூடியவர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள். எனவே நீங்கள் அவர்களுக்குக் கற்பிப்பதற்கும் உங்கள் நடத்தைக்கும் இடையே எந்த முரண்பாடும் இருக்கக் கூடாது. நிச்சயமாக, அஹ்மதி பெற்றோர்கள் தங்களுக்குள் இஸ்லாமிய போதனைகளைப் பின்பற்ற தவறினால், அவர்களின் குழந்தைகள் இன்றைய சமுதாயத்தின் உலகாதாயம், இறைவனை மறந்த நிலை ஆகியவற்றால் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். அதன்படி, அஹ்மதி பெற்றோர்கள் தங்களை மேம்படுத்திக் கொள்ள மிகவும் கவனமாக முயற்சி செய்வது இன்றியமையாதது, இதனால் அவர்கள் தங்கள் குழந்தைகளை சரியாகப் பயிற்றுவிக்கவும் வழிகாட்டவும் முடியும்." (UK ஜலஸா 2022 லஜ்னா உரை)